[illegible]

மலர் 18 இதழ் 3

JL
[illegible]
M27.18.3.
186779

பாலால்—முதல்தர வைர வியாபாரிகள்.
216, சைனுபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 18] பிரபவஹூ—மார்கழிமீ [ஸஞ்சிகை 3

REGISTRAR OF BOOKS
28 JAN 1928
MADRAS

பத்ராதிபா:— ஸ்ரீ. ராஸ தேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ. 3.] *December 1927.* [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

1. பகவானுடைய ஜகத்காரணத்வம்—
ஸ்ரீ உ.ப. தேவனூர் விளாகம் லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர் 57
2. கலி—மகிமை:—ஸ்ரீ. உ.ப: வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் ... 65
3. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை உபந்யாஸ ஸங்க்ரஹங்கள்:— ... 73
4. கடிதங்கள்:— 80
5. புஸ்தக விமர்சம்:— 82
6. பத்ராதிபரின் குறிப்புகள்:— 83
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—
ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்யர் 104
8. ஜிதந்தே ஸ்தோத்ரம்:—ஸ்ரீ. உ.ப. வித்வான் புத்தங்கோட்டஹம்
ஸ்ரீநிவாஸாசார்யர் 9

ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு.

ஸ்ரீ. உ. வே.	வி. வி. வெங்கடரமண அய்யங்கார் கோயமுத்தூர்	3	0	0
,,	வி. ராஜகோபால சர்மா கோயமுத்தூர்	3	0	0
,,	டி. மாணிக்க நாய்க்கர் சேலம்	3	0	0
,,	எஸ். கோவிந்தஸ்வாமி செட்டியார் சேலம்	3	0	0
,,	ஓமலூர் எஸ். வெங்கடாசல செட்டியார் சேலம்	3	0	0
,,	ஸ்ரீதேவப் பிரதீபம் ராமானுஜாசார்யஸ்வாமி வளவனூர்	3	0	0
,,	டி. ஸீதாராம ரெட்டியார் புழுதியூர்	3	0	0
,,	கே. ஆர். ஸ்ரீநிவாஸ வரதாசார்யார் நாகப்பட்டணம்	3	0	0
,,	வி. கே. ராமானுஜாசார்யா கும்பகோணம்	3	0	0
,,	வி. எஸ் ராகவாசார்ய திருச்சினாப்பள்ளி	3	0	0
,,	வி. கோபாலஸ்வாமி அய்யங்கார் பங்களூர்	3	0	0
,,	என். ராகவாசாரியர் கும்பகோணம்	5	0	0
,,	வி. எஸ். எஸ். அய்யங்கார் ஹோஸூர்	3	0	0
,,	வேதாந்த தேசிகாசார்யர் ஹோஸூர்	3	0	0
,,	டி. ராஜகோபாலய்யங்கார் விருத்தாசலம்	3	0	0
,,	ஏ. ரங்காசாரியார் முத்தப்பட்டணம்	3	0	0
,,	டி. எஸ். ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார் ஹைதராபாத்	3	0	0
,,	டி. ஆர். வெங்கடாசாரியார் ஸ்ரீரங்கம்	3	0	0
,,	ராயம்பேட்டை சுந்தரராஜய்யங்கார் திருவையார்	6	0	0
,,	ஏ. கோதண்டராமய்யங்கார் கும்பகோணம்	3	0	0
,,	எஸ் ஸ்ரீநிவாஸ பட்டர் ஸ்ரீரங்கம்	3	0	0
,,	வி. எம். சடகோபாசாரியார் ஹைதராபாத்	3	0	0
,,	வி. ரங்காசாரியார் ஸ்ரீரங்கம்	3	0	0
,,	டி. என். நரஸிம்மாசாரியார் பெரம்பலூர்	5	0	0
,,	கெ. என். ராமஸ்வாமி அய்யங்கார் மதுரை	3	0	0
,,	சீதாராம ரெட்டியார் பளிகைமேடு	3	0	0
,,	டி. டி. ராகவய்யா தில்லஸ்தானம்	3	0	0
,,	அம்பில் நடாதூர் ஸௌந்தரராகவாச்சாரியர் லால்குடி	2	8	0
,,	வி. கோவிந்தராஜ அய்யங்கார் தூசி	1	8	0
,,	ஏ. வி. ராமஸாமி அய்யங்கார் சங்கரிதுர்க்கம்	3	0	0
,,	திருமலை வெங்கடாசாரியர் கோயமுத்தூர்	3	0	0
,,	கெ. ஸ்ரீநிவாஸாசாரியார் பார்க் டவுன்	1	8	0
,,	வி. ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார் தஞ்சை	2	0	0
,,	ப. கிருஷ்ண செட்டியார் சேலம்	3	12	0

ஸ்ரீ:

[illegible]

வே தா ந் த தீ பி கை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. [illegible]தேவாசார்ய்.

ஸம்புடம் 18]   ப்ரபவ [illegible], மார்கழி [illegible]   [ஸஞ்சிகை 3

[illegible]

[illegible]

['ஸ்ரீ பாகவதம். 1·9 23]

ஸ்ரீ:

[illegible]

பகவானுடைய ஜகத் காரணத்வம்.

(ஸ்ரீ உப. தேவனூர் விளாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர்.)

(முன் தொடர்ச்சி. பக்கம்—42.)

ஈச்வரன் ஸகலேதர விலக்ஷண னானபடியால் லோகஸ்ருஷ்டி ப்ரக்ரியயா அவனுக்கு அதிஷ்டாத்ருத்வம் மாத்ரம் சொல்லக்கூடாது. அசிந்த்ய விசித்ர சக்தியானபடியால் தானே ஸங்கல்பித்து ஜகத்ரூபேண ஆகலாம். (மறுவும், '[illegible]' என்று சொல்லி யிருக்கிறார்.) இதையும் தத்வமுக்தா கலாபத்தில் முன் எடுக்கப்பட்ட ச்லோகத்திற்கு முதல் ச்லோகத்தில் ஸங்க்ரஹித்திருக்கிறார்:—

“[illegible]

[illegible]

JAN 1923
MADRAS
186799

நிஷ்க்ருஷ்டே ஸ்வஸ்வரூபிண்யவிகலகுணகணாலங்க்ருதாநந்தரூபே
ஸம்பத்ஸ்யந்தே ஸமஸ்தா: ஸாத்வர்த்தமதயோ நிர்விகாராதிவாதா: ॥"

[அகிலஜநயிது:—எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிற, அவிஜ்ஞேயஶக்தே:—நினைப்பரிய சக்தியுடையவனான, அஸ்யைவ—இவனுக்கே, உபாதாநபாவ:—உபாதாநத்வமும், ஸம்பவேத்—கூடும். ஏனென்றால், யத:—யாதொரு காரணத்தால், ஸூக்ஷ்மாவ்யக்தாதிதேஹ:—ஸூக்ஷ்மமான அவ்யக்தாதிகளைத் தேகமாக உடையவன், ஸ்தூலரூபேண—ஸ்தூலமான கார்யமாக, அநேகதா—பகு ப்ரகாரமாக, பரிணமதி—பரிணமிக்கிறானே (ஆகையால் பாதகமில்லையென்று கருத்து.) அவிகலகுணகணாலங்க்ருதாநந்தரூபே—ஸமஸ்த குணகணங்களால் அலங்க்ருதனான ஆநந்த ஸ்வரூபனான, அஸ்மிந்—இந்த, நிஷ்க்ருஷ்டே ஸ்வரூபிணி—விசேஷண மில்லாத அந்தர்யாமியில், ஸமஸ்தா: நிர்விகாராதிவாதா:—எல்லா நிர்விகார வசநங்களும், ஸாத்வர்த்தமதய:—நல்ல வழியுள்ளவையாக ஆகின்றன] அசிந்த்ய சக்தியானபடியால் உபாதாநத்வத்திற்கும் நிமித்தத்வத்திற்கும் குறைவில்லையென்ற அபிப்ராயத்தால் இந்த வாதத்தில் ப்ரதிபாத்ய குணம் நிரவதிக மஹிமத்வம் என்று அதிகரணஸாராவளியில் ஸாதித்தார். இன்னும் ச்ருதியில் 'யத்பூதயோநிம் பரிபஶ்யந்தி தீரா:' என்று உபாதாநத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விடத்தில் யோநி சப்தம் காரண மாத்ரபரமாக இருக்கக்கூடாதோ வென்னில்: காரண மாத்ர பரமன்று. ஏனென்றால் 'கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி' என்ற ப்ரச்நத்திற்கு ப்ரதிவசந ப்ரகரணத்தில் பூதயோநி என்று ப்ரஹ்மத்தைச் சொல்லியிருக்கிறது. இவ்விடத்தில் ப்ரஹ்மத்திற்குப் பூதோபாதாநத்வம் சொன்னால்தான் 'ப்ரஹ்மவிஜ்ஞாநாத் ஸர்வவிஜ்ஞாநம்' என்றது சரியாகும். கதம் ப்ரஹ்மண: உபாதாநத்வம்? உபாதாநமெல்லாம் வ்யதிரிக்த நிமித்த காரண ஸாபேக்ஷமன்றோ? ஏகமான ப்ரஹ்மம் பரஸ்பர விலக்ஷணமான ப்ரபஞ்சத்திற்கு எப்படி உபாதாநமாகும்? உபாதேயமாகப் பரிணமிக்கும்போது ஸ்வாகார திரோதாநமும் உண்டோ? என்ற சங்கைகள்வர அதை லௌகிக த்ருஷ்டாந்தத்தினால் ஸமர்த்திக்கிறது மேல் வாக்யம் 'யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச யதா ப்ருதிவ்யாமோஷதய: ஸம்பவந்தி। யதா ஸத: புருஷாத் கேஶலோமாநி ததாக்ஷராத் ஸம்பவதீஹ விஶ்வம்' என்று. ஊர்ணநாபி அதாவது எட்டுகால் பூச்சி (ஒட்டடை) தந்துவை உண்டுபண்ணும்போது எப்படி இதர நிரபேக்ஷமோ, அப்படியே அதற்கு அந்தச் சக்தியைக் கொடுத்த ஈச்வரனுக்கும் ஸ்வேதர நிரபேக்ஷமாக ஜகதுபாதாநத்வம் வரலாம். இவ்விடத்தில் ஊர்ணநாபி த்ருஷ்டாந்தத்தால் விசிஷ்டம் உபாதாநம் என்றதும் விசேஷ்யமான ப்ருஹ்மத்திற்கு நிர்விகாரத்வமும் ஏற்பட்டன. ஊர்ணநாபியின் தேகம் [illegible] கேவலாத்மாவிலும் அவஸ்தா ப்ராப்தி யில்லை;

கிந்து, தேஹ விசிஷ்டாத்மாவிலே; அப்படியே கேவல ப்ரக்ருதியிலும் அவஸ்தாச்ரயத்வம் வாராது; கேவல ப்ருஹ்மத்திலும் வாராது; கிந்து, விசிஷ்ட ப்ருஹ்மத்தில் தான். விசிஷ்டப்ருஹ்மத்தில் வந்தாலும் விசேஷ்யத்தில் தோஷங்கள் சேரா. இதை 'ஸூக்ஷ்மஸ்தூலாம்ஶதாதிராத்ராஹ்ந அவிக்ருதிரஸௌ ஸர்வதா ஸாக்ஷாத் ஸ்வாதந்த்ர்யேண தேஹயோகேன நாதஸ்தி ப்ரக்ருதி விக்ருதி ஸஞ்சாரி வர்த்ததே தேசனவஸ்தாபாஸ்' என்று அதிகரண ஸாராவளியில் ஸாதித்திருக்கிறார். ப்ருதிவீ புருஷ த்ருஷ்டாந்தத்தால் ஏகத்திற்கே அநேக கார்யோபாதாநத்வமும் பூர்வாவஸ்தா திரோதாநாபாவமும் பொருந்தும் என்றதாயிற்று. ததா ச ப்ருஹ்மண: உபாதாநத்வமும் நிமித்தத்வமும் ஸித்தம். இந்த யுக்திகளை, ஸூத்ரத்தை ஒட்டி, 'காயேச்சைகஹி ப்ரதிஜ்ஞா ததநுகுணம் உதாஹாரி த்ருஷ்டாந்த வர்க்க ஸ்ரஷ்டுஸ்ஸ்ரஷ்டவ்யதைக்யம் ஸ்ருதிரிஹ வததாம் ப்ரத்யக்ஷதாதிக்ஞ வக்தி। ஸூதாநமேவ ஸர்வ ஸ்வயமபவத் ததாத்யோநிஸ்வரூபம் தஸ்மாத்ருதவாநிதி ப்ரக்ருதிரபி ஹேதுஸ்தத்ர காரணாந்தராணா॥" என்ற ஒரு ச்லோகத்தால் ஸங்க்ரஹித்தார் நம் தேசிகன். 'காயேச்சைகஹி ப்ரதிஜ்ஞா வதே' என்ற இதனால் உபாதாநத்வமும் அர்த்தாத் நிமித்தத்வமும் சொல்லப்பட்டன. ததநுகுணமாக வன்றோ த்ருஷ்டாந்தத்ரயமும் உதாஹரிக்கப் பட்டிருக்கிறது? ஸ்ரஷ்டாவுக்கு 'ஸ்யாம்' என்ற ஸங்கல்பத்தையும் ஸத்வத்தையும் வ்ருக்ஷத்வம் முதலியவற்றையும் ச்ருதி சொல்லுகிறது. 'ஸச்ச ஸச்சாபவத் தஸ்மாத்' என்றும் 'ஸதயோநி' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லா தத்வங்களுக்கும் அந்தராத்மாவான (அதாவது எல்லாவற்றிற்கும் சரீரியான) ஈச்வரன் அநவதிக மஹிமாவானபடியால் நிமித்தமாயும் உபாதாநமாயும் ஆகலாம்.

ப்ருஹ்மம் ஒன்று தான் ஸத்யம் மற்றது மித்யை என்றும், ப்ருஹ்மம் அதிஷ்டாநம் என்றும் சொல்லும் பக்ஷத்தில் ப்ருஹ்மத்தை உபாதாநமாகச் சொல்வதும் உபாதாந பூத ப்ருஹ்ம ஜ்ஞாநத்தால் உபாதேய ஸர்வஜ்ஞாநமும் உண்டாகலாம் என்று சொல்வதும் பொருந்தாது. ரஜ்ஜுவைப் பார்த்து ஸர்ப்பம் என்று ஒருவன் ப்ரமித்தால் மித்யையாகத் தோன்றும் ஸர்ப்பத்திற்கு ரஜ்ஜு உபாதாநமாக மாட்டாது போல், மித்யையான ஜகத்திற்கு ஸத்யமான ப்ருஹ்மம் உபாதாநமாக மாட்டாது. ஸர்வம் யதா, ரஜ்ஜு ஜ்ஞாநத்தினால் ஸர்ப்ப பூதளந அம்பு தாராதிகள் விஜ்ஞாதமாகாவோ, அப்படியே ப்ருஹ்ம ஜ்ஞாநத்தினால் மித்யா வஸ்துக்களுக்கு ஜ்ஞாதத்வம் வாராது. ஆனால் லோகத்தில் ஒருவன் ரஜ்ஜுவைப் பார்த்து ஸர்ப்பம் என்றும், மற்றொருவன் பூதளநமென்றும், பலபேர் பலவிதமாக ப்ரமித்துக்கொண்டிருந்தால், ரஜ்ஜு ஜ்ஞாநம் வந்தால் எல்லாம் தெரியும் என்றால், ரஜ்ஜு தவிர ஸர்ப்பாதிகள்

இல்லாததாயிட்டால் எல்லாம் தெரியும் என்று எப்படி அர்த்தம் கொள்வது உசிதமோ, அப்படியே ஜகத் மித்யை என்று 'வாசாரம்பணம்' என்ற ச்ருதியில் ஏற்பட்டபடியால் ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாநத்தை அதே மாதிரி நிர்வஹிக்கலாம் என்றால் அதுவும் அநுபபந்நம். 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்ற ச்ருதியில் ஜகத்திற்கு மித்யாத்வம் ஏற்படாது. அந்த ச்ருதிக்கு, விகார:—அவஸ்தா என்ன, நாமதேயம்—பெயரென்ன இவைகள், ஆரம்பணம்—தொடப்படுகின்றன; ஸ்ப்ருஶ்யத இதி ஶேஷ:. எதற்காக வென்றால், வாசா—வாக் சப்தத்தால் தத்பூர்வக வ்யவஹாரம் சொல்லப்படுகிறது, வ்யவஹார ரூப ஹேதுவால்; அதாவது வ்யவஹாரார்த்தம் என்று சொல்லப்பட்டது. வ்யவஹாரம் முதலியவைகளுக்காக ம்ருத் த்ரவ்யமானது கடாதி ரூப விகாரத்தையும் கடாதி நாமதேயத்தையும் அடைகிறது என்று கட்ட தாத்பர்யம். எதனால் அப்படிச் சொல்வதென்றால் மேல் 'ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடாதிகளெல்லாம் ம்ருத்திகை யென்றே ப்ரமாண ப்ரதிபந்நமானபடியால்; ததா ச, யத: ம்ருத்திகேத்யேவ ஸத்யம் அத: விகார: நாமதேயம் ஆரம்பணம் வாசா இத்யந்வய:. 'காலையில் எந்த ம்ருத்தானது என்னால் பார்க்கப்பட்டதோ அதே ம்ருத் இப்பொழுது கடமாக ஆயிற்று' என்கிற ப்ரத்யபிஜ்ஞையால் கடாதிகள் ம்ருத்தைக்காட்டிலும் அபிந்நம் என்று ஏற்படுவதால் கட சராவாதி ரூபேண விகாரமும் தாத்ருச பெயரும் வ்யவஹாரம் முதலியவற்றுக்காகக் கடத்திற்கு வந்திருக்கிறது. வஸ்துத: ம்ருத்தும் கடமும் ஒரே த்ரவ்யமே என்றுதான் அர்த்தம் கொள்ளவேணும். அதஏவ ம்ருத்திகேத்யேவ ஸத்யம் என்று சொல்லவேணுமே தவிர அவதாரணம் வ்யர்த்தமாகும். இதை ஒரு அநுஷ்டுப்பில் பூர்வர்கள் ஸங்க்ரஹித்தார்கள்,

"வாசாரம்பண இத்யுக்தே ரித்யேதத் ப்ரஸக்தகல்பநம் ।
வ்யவஹாரார்த்தம் நாமதேய இதீத்யஸ்ய நிரூபிதா ॥"

ஆகையால் விவர்த்தவாதத்தில் உபாதாநத்வமும் ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞைகளும் பொருந்தமாட்டா.

ப்ருஹ்மத்திற்கே உபாதாநத்வத்தையும் நிமித்தத்வத்தையும் தெளியாத பறை நிலங்களைத் தெளிவிக்க வந்த குருகேசாதிகள் செய்த தமிழ்மாலைகளில் அவ்வவ்விடங்களில் அருளிச்செய்திருக்கிறார். அதில் 'யத்தத்க்ருத்யம் ச்ருதீநாம் முநிகண விஹிதை: ஸேதிஹாஸை: புராணை: தத்ராஸௌ ஸத்வஸீம்ந: ஶடரிபுமுநே: ஸம்ஹிதா ஸார்வபௌமீ' [முநிகண விஹிதை:—முநிகணங்களால் செய்யப்பட்ட, ஸேதிஹாஸை:—இதிஹாஸங்களோடு கூடின, புராணை:—புராணங்களால், ச்ருதீநாம்—ச்ருதி

களுக்கு, யத்தத்க்ருத்யம்—செய்யக்கூடியது யாதொன்றோ, தத்ர—அதில், ஸத்வஸீம்ந:—ஸத்வத்திற்கு வாஸஸ்தாநமான, ஶடரிபுமுநே:—ஆழ்வாருடைய, ஸம்ஹிதா—வேதமானது, ஸார்வபௌமீ—சக்ரவர்த்தினி] என்று ஆழ்வார் ஸூக்தி வேதோப ப்ருஹ்மணங்களுக்குள் ப்ரதாநம் என்றும், "ஶாஸ்த்ரே தேஹாதிரிக்தாத்மநி ததிபதௌ தத்ப்ரஸாதாய தர்மே ஶ்ரேயஸ்ஸாத்யே ததுபசரணதோ அஜ்ஞதாபாபநோதே । தத்பக்தாநாம் ப்ரபாவே ததுபஸதநத: ஸித்தஸாயுஜ்யஸாம்யே ஶாஸ்த்ரம் வேத்யம் ஸ்வவேதே ஸகலமகதயத் ஸாநுகம்ப: ஶடாரி: ॥" [தேஹாதிரிக்தாத்மநி—தேகத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்ம விஷயத்திலும், ததிபதௌ—அதற்குச் சேஷியான ஈச்வர விஷயத்திலும், தத்ப்ரஸாதாய தர்மே—அவனுடைய ப்ரஸாதத்திற்கு வேண்டிய உபாயத்திலும், தத்ப்ராப்தி ஶ்ரேயஸாத்யே—அந்த உபாயத்தால் மோக்ஷம் அடைவதிலும், ததுபசரணத:—பகவதுபசாரத்திலும், அஜ்ஞதாபாபநோதே—அஜ்ஞந தாபத்தைப் போக்குவதிலும், தத்பக்தாநாம் ப்ரபாவே—பகவத் பக்தர்களுடைய ப்ரபாவத்திலும், ததுபஸதநத: ஸித்தஸாயுஜ்யஸாம்யே—பாகவத உபாஸநத்தால் சித்தசாயுஜ்யத்தினுடைய சமநத்திலும், ஶாஸ்த்ரே—சாஸ்த்ரத்தில், வேத்யம்—அறியக்கூடிய, ஸகலம் ஸாரம்—ஸகல ஸாரத்தையும், ஸாநுகம்ப:—தயையோடு கூடின, ஶடாரி:—ஆழ்வார், ஸ்வவேதே—தமது வேதமான திருவாய்மொழியில், அகதயத்—அருளிச்செய்தார்.] என்று நிகில சாஸ்த்ர ஸாரங்களையும் ஸங்க்ரஹித்தார் ஆழ்வார் என்றும், 'ஆதௌ ஶாரீரகார்த்தக்ரமமிஹ விஶதம் விம்ஶதிர் வக்தி ஸாக்ரா' [அத்ர—இந்தத் திருவாய்மொழியில், ஆதௌ—முதலில், ஸாக்ரா—அக்ரத்தோடு கூடின, அதாவது சொச்சமான, விம்ஶதி:—இருபது பாசுரம், ஶாரீரகார்த்தக்ரமம்—சாரீரகம் என்று பேர் பெற்ற வேதாந்தார்த்த க்ரமத்தை, வக்தி—சொல்லுகிறது] என்றும், 'த்விகாப்யாம் அஷ்டாங்க்ரி: ... மதநீதிஸ்வப்நிதா யந்நிஷ்டா ஸூத்ரமீமாம்ஸா ச்ருதிஶிரஸ தத்வம் வ்யவ்ருணுத । தத்ரார்த்தம் ஸாதிகவிம்ஶாதிபிஹ ... க்ஷமீ ஸூரி: ... க்ருபயா ॥' [த்விகாப்யாம்—பூர்வத்விக உத்தர த்விகங்களால், அஷ்டாங்க்ரி:—பதினாறு பாதத்தோடு கூடினதாயிருக்கிற, ஸூத்ரமீமாம்ஸா—ப்ருஹ்ம மீமாம்ஸா சாஸ்த்ரமானது, யத்—யாதொரு, ச்ருதிஶிரஸ தத்வம்—வேதாந்த தத்வத்தை, வ்யவ்ருணுத—விவரித்ததோ, தத்—அந்த வேதாந்த தத்வத்தை, க்ஷமீ—ஸமர்த்தரான, ஸூரி:—ஆழ்வார், க்ருபயா—தயையினால், அத்ர—இந்தத் திருவாய்மொழியில், ஆதௌ—முதலில், ஸாதிகவிம்ஶாபி:—இருபதுக்கு

அதிகமான, மாயாபிஃ—பாசுரங்களால், ஸமஜக்ரஹ—ஸங்க்ரஹித்து, நஃ—நமக்கு, வ்யதாரக்—கொடுத்தார்.] என்று சாரீரக சாஸ்த்ர ஸங்க்ரஹம் இருபத்தோரு பாசுரத்தால் செய்யப்பட்டதென்றும் நம் தேசிகனால் கொண்டாடப்பட்டுள்ள திருவாய்மொழியில் பரத்வ ப்ரதிபாதகமான முதல் தசகத்தில்—

“திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை தொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே.”

[திடவிசும்பு—வாய்வாதிகளைக் காட்டிலும் சிரகால ஸ்தாயியான அல்லது த்ருடப்ரமாண ஸித்தமான ஆகாசம், எரி—அக்நி, வளி—வாயு, நீர்—ஜலம், நிலம்—பூமி, இவைமிசை—இந்தப் பதார்த்தங்களின் மேல், படர் பொருள் முழுவதும்—படருகிற எல்லா வஸ்துவும் (ஜகத் பாஞ்ச பௌதிகமானபடியால் எல்லா ஜகத்தும் என்றபடி) ஆய்—ஏதத் ரூபேண ஆகி, அவை அவை தொறும்—அந்தந்தப் பதார்த்தங்கள் தோறும், உடல் மிசை உயிரென—சரீரத்தில் ஜீவன்போல, கரந்து—மறைந்து, எங்கும் பரந்து—அந்தர் பஹிஶ்ச வ்யாபித்து, இவை உண்ட சுரன்—இவற்றைப் ப்ரளயகாலத்தில் ஸம்ஹரித்த தேவன், சுடர் மிகு சுருதியுள்—ஸ்வதஃப்ராமாண்யதயா தேஜிஷ்டமான வேதத்தின் உள்ளே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறான் என்றபடி] என்ற பாசுரத்தால் உபாதானத்வத்தையும் அதற்கு உபபாதகமான சரீராத்ம பாவத்தையும், அந்த விஷயத்தில் ப்ரமாணம் ச்ருதி யென்பதையும் அருளிச்செய்தார். இவ்விடத்தில் உபாதானத்வம் விவக்ஷிதமென்பது, “முழுவதும் ‘ஆய்’ என்பானேனென்னில், ‘பஹுஸ்யாம்’ என்கிற தன் விகாஸ மாகையாலே வைதிக நிர்த்தேச மிருக்கிறபடி” என்ற ஈட்டின் பங்க்தியால் நன்றாய் ஏற்படுகிறது. இந்த விடத்தில் ‘உடன்மிசை யுயிரென’ என்ற த்ருஷ்டாந்தத்தால் ஸ்வகத ஸ்வபாவாந்யதாத்வ ஸ்வாஶ்ரயத்வம் ஜீவனுக்கு எப்படி ஸத்வாரகமோ அப்படியே தானும் ஈச்வரனுக்கும், அதனால் நிர்விகாரத்வாதி ச்ருதிவிரோத மில்லை யென்று கீழ் உபபாதித்த அர்த்தமெல்லாம் கர்ப்பிதமென்று ஏற்படுகிறது. மேலும் ‘நினைந்த வெல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே’ ‘தானோருருவே தனிவித்தாய்’ ‘இவையு மவையு முவையும் இவரு மவரு முவரும் யவையும் யவரும் தன்னுள்ளேயாகியு மாக்கியுங் காக்கும் அவையுள் தனி முதலெம்மான்’ என்றும் சொல்லப்பட்ட விடங்களில் ஸ்பஷ்டமாக உபாதானத்வமும் நிமித்தத்வமும் ஏற்படுகின்றன. இப்படியே மேல் பத்துகளிலும் அவ்வவ்விடங்களில் ‘யதுக்தம்’

என்று சொன்னபடி, உபப்ருஹ்மண மானபடியால் ச்ருதியில் போல் கலுஷிதமாகச் சொல்லாதபடி ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறார். அதில் அஹம்பாவ விஷயனாக எம்பெருமானை ஆழ்வார் அநுபவிப்பதாக நம் தேசிகன் திருவுள்ளம் பற்றி யிருக்கும் ‘கடல் ஞாலம்’ என்ற தசகத்தில் முதல் பாசுரத்தில் ‘கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும் கடல் ஞால மாவேனும் யானே யென்னும்’ என்ற இரண்டடியால் ப்ரும்ஹத்திற்கே உபாதானத்வம் நிமித்தத்வம் என்றதைக் காட்டி யருளினர். அநுபவித்தபடியே பேசும் பேச்சான படியாலே கொஞ்சமேனும் இதில் சொன்ன அர்த்தங்களில் ஸம்சயிக்க இடமில்லை. ‘பாரிட முன்படைத்தா னென்பரால் பாரிட மாவானும் தானானால்’ என்று பெரிய திருவந்தாதியிலும் அருளிச்செய்தார்.

இதே மாதிரியாகவே பல சமயங்கள் கற்ற தைம் மகத்தில் வந்து உதித்த மழிசைப்பரனும் மெய்ம் மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடலில்—

“பூநிலாய வைந்துமாய்ப் புனற்க ணின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண நின்னை யார் நினைக்க வல்லரே”

[பூநிலாய—பூமியில் வர்த்திக்கிற, இப்படியே மேலும். ஐந்துமாய்—சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள் ஐந்துமாய், புனல் கண் நின்ற—ஜலத்தில் உள்ள, நான்குமாய்—கந்தம் தவிர மற்ற நாலு வஸ்துவாய், தீ நிலாய மூன்றுமாய்—தேஜஸ்ஸில் வர்த்திக்கிற சப்த ஸ்பர்ச ரூபங்கள் மூன்றுமாய், சிறந்த கால்—வாயுவில் இருக்கிற, இரண்டுமாய்—சப்த ஸ்பர்சாத்மக இரண்டுமாய், மீநிலாயது ஒன்றுமாகி—ஆகாசத்தில் வர்த்திக்கிற சப்தமாய், வேறு வேறு தன்மையாய்—தேவாதிகளுமாய், நீ நிலாய வண்ணம்—சிதசித் சரீரகனாக கார்ய காரண வர்க்கத்திலே நிற்கிற ப்ரகாரம், நின்னை—ஜகதுபாதானமான உன்னை, யார் நினைக்க வல்லரே—(வேதாந்திகளைக் காட்டிலும்) வேறு யார் அறியவல்லர்?] என்று முதற்பாட்டிலேயே ஜகதுபாதானத்வ நிமித்தத்வத்தைப் பேசி, அது வேதாந்திகள் தவிர மற்றொருவருக்கும் நிலமல்ல (அதாவது வேதாந்திகள் தவிர மற்றவரும் உன்னுடைய ஜகதுபாதானத்வாதிகளை அறியார்)என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில் ‘யார் நினைக்க வல்லரே!’ என்றதற்குப் ‘பரமாணுக்கள் உபாதான காரணம் என்று வைசேஷிகர்களும், ப்ரதானம் உபாதான காரணம் என்று ஸாங்க்யர்களும், நிமித்தோபாதானங்களுக்குப்பேதம் உண்டெனச் சொல்லும் சைவர்களும், சிதசிதீச்வர தத்வத்ரயங்களும் ப்ரும்ஹ பரிணாமமென்ற பேதாபேதிகளும், நிர்விசேஷ வஸ்து வ்யதிரிக்தங்கள் அபாரமார்த்திக மென்ற மாயாவாதிகளும் நினைக்க முடியாமல் வேதாந்த ப்ரமே

யம் கைப்பட்டார்க்கு நினைக்கும்படியா யிருக்கிறாய்' என்று பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் பாவ வர்ணநம் பண்ணி யிருக்கிறார்கள். இப்படி உபாதாந காரணத்வத்தைச் சொல்லி ப்ரஸக்த்பா ஸர்வாந்தராத்மத்வாதிகளைச் சொல்லி, பத்தாம் பாட்டிலே ஸத்ருஷ்டாந்தமாகப் பின்வருமாறு நிகமித்தார்:—

"தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்க ணின்றதே"

[தன்னுளே திரைத்து எழும்—அபிவ்ருத்தமாகும், தரங்கம் வெண்—அலைகளையும் வெண்மையையும் உடைத்தான, தடம் கடல்—விசாலமான ஸமுத்ரமானது, தன்னுளே—தனக்குள்ளே, திரைத்து எழுந்து—கிளர்ந்து மேலெழுந்து, அடங்குகின்ற தன்மைபோல்—அடங்குகின்ற ஸ்வபாவம் போலே, நின்னுளே—உன் ஸ்வரூபத்திற்குள்ளே, பிறந்து—பிறந்து, இறந்து—இருக்கிற, நிற்பவும்—ஸ்தாவரங்களும், திரிபவும்—ஜங்கமங்களும் நின்னுளா—உன் பக்கலிலே, அடங்குகின்ற நீர்மை—அடங்குகின்ற (இந்த) ஸ்வபாவமானது, நின்கண்—உன்னிடத்தில், நின்றது—நின்றது. அதாவது இவ்வுபாதாந காரணத்வம் வ்பக்த்யந்தரத்தில் நாஸ்தி என்றதாயிற்று.] இந்தத் தமிழ் வேதத்தில் ச்ருதியில் சொன்ன த்ருஷ்டாந்தம் போதாது என்று திருவுள்ளத்தால் சிதசித்துக்கள் தன் ஸ்வரூபத்தில் அடங்கியிருக்கச் செய்தேயும் பரஸ்பர தர்ம ஸங்க்ராந்தியில்லையென்பதற்கும் த்ருஷ்டாந்தத்தைக் காட்டியருளினார். ஆகையால் இந்த த்ருஷ்டாந்தத்தை நோக்கினும் ஜகதுபாதாநத்வம் ஸித்தம். இதற்கு மேல் பாட்டுகளிலும் ப்ரஸக்தாநுப்ரஸக்த்பா ஜகதுபாதாநத்வத்தை அருளிச்செய்திருக்கிறார். மற்றச் சமயங்கள் பல தெரிந்தவரான இவ்வாழ்வார் பாடலை 'மெய்ம் மிகுத்த' என்று விசேஷித்து நம் தேசிகன் அருளிச்செய்தார். நான்முகன் திருவந்தாதியிலும் 'நீயே யுலகெல்லாம்' என்றும் 'நீயே எரிசுடரும் மால்வரையும் எண்டிசையு மண்டத் திருசுடரு மாயவிவை' [நீயே உலகெல்லாம். இதையே பிரித்துச் சொல்லுகிறார். நீயே எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத் திருசுடரும் இத்யாதி இவையாய பதார்த்தங்கள் நீயே] என்றார்,

"வானுலவு தீவளி மாகடல்மா பொருப்பு
தானுலவு வெங்கதிரும் தண் மதியும்—மீனிலவு

கொண்டல் பெயரும் திசை யெட்டும் சூழ்ச்சியும்
அண்டந் திருமா லகைப்பு."

[வான்—ஆகாசமும், உலவு தீ—ஜ்வலிக்கிற நெருப்பும், வளி—வாயுவும், மா கடல்—பெரிய ஸமுத்ரமும், மா பொருப்பு—பெரிய மலைகளும், தான் உலவு வெம் கதிரும்—ஈச்வர ப்ரேரிதனாய்த் தான் ஸஞ்சரிக்கிற ஸூர்யனும், தண் மதியும்—குளிர்ந்த சந்த்ரனும், மீனிலவு கொண்டல்—மேலே ஸஞ்சரிக்கின்ற மேகமும், பெயரும்—நாமங்களும், திசை எட்டும்—எட்டுத் திசைகளும், சூழ்ச்சியும்—ஆவரணமும், அண்டம்—ஏதத்ரூபமான அண்டமும், திருமால்—ச்ரிய: பதியினுடைய, அகைப்பு—எழுச்சி. எழுச்சியென்று பொருளாய் எழுச்சி ஸங்கல்பத்தினால் உண்டாயது என்னவுமாம். ச்ரிய: பதியே இப்படி ஆயிருக்கிறான் என்று உபாதாநத்வமும், அன்றியே அகைப்பு—ஸங்கல்பத்தினால் உண்டாயது என்று பொருளாய் நிமித்தத்வமும் ஏற்படுகிறது.] என்றும் அருளிச்செய்தார்.

(இன்னும் வரும்)

கலி மகிமை.

[ஸ்ரீ. உ.வே. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய.]

க்ருதம் த்ரேதை த்வாபரம் கலி என வழங்கப்பட்டு வரும் நான்கு யுகங்களுக்குள் மூன்று கால்களும் முறிந்து நடக்கச் சக்தியில்லாமல் ஒற்றைக் காலுடன் தரையில் புரண்டுகொண்டிருக்கும் தர்ம வ்ருஷபத்தின் துரவஸ்தையைக் கண்ணுற்ற புராதந மஹர்ஷிகள் இந்தக் கலியுகத்தை மஹா கொடிய யுகமென்று இகழ்ந்திருக்கிறார்கள். மற்ற யுகங்களில் நெடுங் காலத்தினால் ஸித்தி யடைய வேண்டிய யஜ்ஞம் தாநம் தபஸ் இவைகளெல்லாம் இந்த யுகத்தில் விரைவாக ஸித்தித்து அபீஷ்ட பலன்களைக் கொடுக்கும் திறமையுள்ளவைகளாக ஆகிறபடியால், இந்த யுகத்தை மற்றும் சில மஹான்கள் ஒருவாறு நல்ல யுகமென்றும் புகழ்ந்திருக்கின்றார்கள். "ஸர்வே யஜ்ஞா: க்ருதே ஜாதா: ஸர்வே நஷ்டா: கலௌ யுகே" என்கிற வ்யாஸ மஹர்ஷியின் உக்தியை அநுஸரித்து இந்த யுகத்தில் தர்மங்கள் முற்றிலுமே அழிந்து விட்டன. எல்லா அநர்த்தங்களுக்கும் காரணம் யாதெனில், தர்ம லோப மொன்றே. இந்தக் கலி மஹிமையினால் பசுப்போல் பகுத்தறிவற்ற ப்ராணிகள் 'இது நன்மை இது தீமை' என்றாவது, 'இது தர்மம் இது அதர்

மம்' என்றாவது, 'இது ஹிதம் இது அஹிதம்' என்றாவது அறிவதற்குச் சக்தி அற்றவர்களாக ஆய்விட்டார்கள். “ க்ஷமாய நித்ரா பயவஶங்காதி வாசாந்யதேத த்வஸ்யாஹிதபுராணாம் । யதேபாஹிதேஷா சயிகோவிமேஷா யதேபுண ஹிதாः வஶாஹி ஸூசாதாः ॥ ” என்று அறிஞர்களும் கூறி யிருக்கின்றனர். 'இது செய்யத் தக்கது, இது செய்யத் தகாதது,' 'இது நன்மையைப் பயக்கத்தக்கது, இது தீமையை விளைவிக்கக்கூடியது,' 'இது கைக் கொள்ளத் தக்கது, இது விலக்கத்தக்கது' என்று விஷயங்களை நன்றாக நிரூபித்துக் காட்டி உலகில் உள்ளோர் அனைவரையும் உஜ்ஜீவிக்கச் செய்வதில் கருத்துள்ள வேதங்கள் சாஸ்த்ரங்கள் இதிஹாஸங்கள் புராணங்கள் மற்றுமுள்ள புண்ய கதைகள் அனைத்தும் ப்ரமாண மார்க்கத்திலிருந்து விலக்கப் பட்டு மின்னொளிபோல் ஒரு நொடியில் மறைந்து விட்டன. ஜகத் ப்ரகாசகங்களான வேதசாஸ்த்ரங்கள் மறைந்து போகவே, அஜ்ஞானமாகிற இருள் வீக்கம் எங்கும் பரவி நன்னெறிகள் மறைந்து போயின. காவ்யாதர்சத்தில் “ இதமந்தம் தமः க்ருத்ஸ்நம் ஜாயேத புவநத்ரயம் । யதி ஶப்தாஹ்வயம் ஜ்யோதிராஸம்ஸாரம் ந தீப்யதே ॥ ” என்று தண்டியாசார்யனும் இவ்விஷயத்தைக் கணிசித்தே பகர்ந்திருக்கின்றார். அதுபோல உலகில் எல்லா ஐஹிக லோகங்களுக்கும் ஆமுஷ்மிக லோகத்திற்கும் ஸாதநங்கள் வாங்மயங்களே. அந்த வாங்மயங்களுக்குள் சிறந்தது வேதம். அதற்கு அடுத்தது ஸ்ம்ருதி; அதற்கு அடுத்தது சிஷ்டாசாரம். ஜகத்துக்கு க்ஷேமத்தை விளைவிப்பதில் பத்த தீக்ஷங்களாக இருக்கிற முற் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் இக் கலிமஹா புருஷ வைபவத்தால் விரட்டி அடிக்கப்படவே, அந்தோ ! அந்தணர்கள் அனைவரும் மற்றவர்களுக்குச் செந்தணல் போலாயினர். சிஷ்டர்கள் ப்ரஷ்டர்கள்போல் வருந்துகின்றனர். உலகமே உச்சநீசமாக ஆகித் தடுமாறுகின்றது. “ ஜ்ஞாதிஷம் வர்ணஸமாஶ்ரம ப்ராயஶ்சித்தம் சிகித்ஸகம் । விநாஶாய த்ரயோ ப்ரூயாத் தாஸாப்ரவ்ருத்த வாதகம் ॥ ” என்கிற அபிஜ்ஞ சிகாமணிகளின் வசனங்கள் இக் கலியுக ஸ்மார்த்தாக்களுக்கு அப்ரமாணங்களாக ஆயின. ஆயிரம் மாதா பிதாக்களுக்கு ஸமானமாக அதிக வாத்ஸல்யத்தை ப்ராணி வர்க்கங்களின் மீது காண்பிக்கின்ற வேத மாதாவும் இக் கலியுகத்திலுள்ள புதல்வர்களால் அவமதிக்கப்பட்டு விட்டாள். இவைபோன்ற அநேக விஷயங்கள் இக் கலியுகத்தில் ஸம்பவிக்குமென்றே மஹர்ஷிகள் கூறி இருக்கின்றனர். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், ஆறாவது அம்சத்தில், மைத்ரேயர் ஸ்ரீ பராசர மஹர்ஷியை நோக்கி “ கலேः ஸ்வரூபம் பகவந் விஸ்தராத்ப்ரப்ரூஹி மே । யஸ்மிந்தர்மோ த்விஜஶ்ரேஷ்ட விப்லவமேஷ்யதி । ” என்று கேட்க, ஸ்ரீ பராசர மஹர்ஷியும்

கலியின் கொடுமையை இரண்டு அத்யாயங்களால் எடுத்து ஸவிஸ்தாரமாகக் கூறி இருக்கிறார். அவற்றுள் சில முக்யமான அம்சங்களை மட்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

“ வர்ணாஶ்ரமாசாரவதீ ப்ரவ்ருத்திர்ந கலௌ ந்ருணாம் । ந ஸாமருக்யஜுர்தர்ம விநிஷ்பாதநஹேதுகீ ॥ விவாஹா ந கலௌ தர்ம்யா ந ஶிஷ்யகுருஸம்ஸ்திதிः । ந தாம்பத்யக்ரமோ நைவ வஹ்நிதேவாத்மகः க்ரமः । யத்ர குத்ர குலே ஜாதோ பலீ ஸர்வேஶ்வரः கலௌ । ஸர்வேப்ய ஏவ வர்ணேப்யோ யோஷித்கந்யா விவாஹநே । யேநகேநசயோகேந த்விஜாதிர்தீக்ஷிதः கலௌ । யைவ சைவ அபஶ்ரேய ப்ராயஶ்சித்தம் கலௌ க்ரியா । ஸர்வமேவ கலௌ ஶாஸ்த்ரம் யஸ்ய யத்வசநம் த்விஜ । தேவதாஶ்ச கலௌ ஸர்வா ஸர்வஸ்ஸர்வஸ்ய சாஶ்ரமः । உபவாஸஸ்ததாயாஸோ வித்தோத்ஸர்கஸ்ததா கலௌ । தர்மோ யதாபிருசிதைரநுஷ்டிதோ தர்ம உச்யதே । வித்தேந பவிதா பும்ஸாம் ஸ்வல்பாட்யேஷு மதः கலௌ । ஸ்த்ரியः கலௌ பவிஷ்யந்தி ஸ்வைரிண்யோ லலிதஸ்ப்ருஹாः । அந்யாயோபாத்தவித்தேஷு லோலுபாः ஸ்வல்பபாஹவः । அநாவ்ருஷ்டிபய ப்ராயாः ப்ரஜாः க்ஷுத்பயகாதராः । பவிஷ்யந்தி ததா ஸர்வே மநுஷ்யா நபஶ்சக்ஷுஷः । ”

[இவைகளின் சுருக்கமான பொருள்:—இந்தக் கலியில் வர்ணாச்ரமாசாரங்களை அநுஷ்டிப்பதிலும் வேதோக்த தர்மங்களை ஆசரிப்பதிலும் ஒருவருக்கும் எண்ணமுண்டாகாது. தார்ம்யமான விவாஹம் கிடையாது. குரு சிஷ்ய க்ரமமும் இல்லை. தம்பதிகள் இருக்க வேண்டிய முறை, அக்நி, பரிசர்யை, யாகம் இவைகள் ஒன்றும் கிடையாது. இழி குலத்தில் பிறந்திருந்தாலும், எவன் பலமுள்ளவனோ அவன்தான் ப்ரபுவாக ஆகிறான். எந்த வர்ணத்தில் பிறந்திருந்தாலும், அவன் எந்த வர்ணத்தைச் சேர்ந்த பெண்ணையும் விவாஹம் செய்யத் துணிவான். கலியில் எவன் எதைச் சொல்லுகிறானோ அது சாஸ்த்ரம். கலியில் எல்லாம் தேவதைகள். எல்லாம் எல்லோருக்கும் ஆச்ரமங்கள். ஸ்த்ரீகளுக்குப் பொருளுள்ளவர்கள் கணவர்கள். ஸ்த்ரீகள் கலியில் குல மர்யாதையை மீறி நடப்பவர்களாகவும், அழகுள்ளவர்களிடத்தில் ஆவலுள்ளவர்களாகவும் ஆகிறார்கள். மனிதர்கள் அந்யாய மார்க்கத்தினால் பொருளைத் தேடுவதில் ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள். மழை இல்லாமையினால் ப்ரஜைகள் பயம் மேலிட்டவர்களாகவும் பசியினால் வருந்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். மழை வருமா வருமாவென்று ப்ரஜைகளெல்லாம் ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து கொண்டே இருப்பார்கள்.] இப்படிச் சொன்ன ஸர்வஜ்ஞரான மஹர்ஷியின் வாக்கு வீணா

ஆகுமோ ? "ஜ்ஞானிகாநாம்ஹி ஸாயுஜ்யம் நாஸ்தி வா மம ஸ்வதந்த்ரதே! ஜ்ஞானாம் ஸ்வதந்த்ரம் வா ஸ்வயம் ஸ்வயாவதி" என்றல்லவோ ஸர்வஜ்ஞர்களுடைய வசநம். இங்குக் கீழ் எடுத்து உதாஹரிக்கப்பட்டிருக்கிற ரிஷி வசநங்களை யதார்த்தங்களாகச் செய்வதற்காகவே சில போலி மஹாத்மாக்கள் இப்பொழுது அவதரித்து விட்டார்கள். இவர்களுடைய வ்யவஹாரங்களில் சில முக்ய விஷயங்களை மாத்ரம் எடுத்துக் கூறத் துணிகிறேன். ஸ்தாலீபுலாக ந்யாயமாக மற்றவைகளை ரஸிகர்கள் தெரிந்து கொள்ளலாம். கலிமஹாராஜாவின் ப்ருத்யர்கள் சொல்வதாவது:—ஜாதி வ்யத்யாஸம் கூடாது. வர்ணாச்ரம தர்மங்களென்பது யாரோ படித்தவர் சிலர் ஸ்வய நலம் பாராட்டி எழுதிக் கொள்ளப்பட்டவைகள்; முற்றிலும் அவைகள் வெறுக்கத் தக்கவைகள். தங்களை மேன்மைப்படுத்திக் கொள்வதற்காகவே மற்றவர்களைப் படிப்பில்லாமல் பசுவாக ஆக்கிவிட்டார்கள். புருஷர்களுக்குப் போலவே ஸ்த்ரீகளுக்கும் ஸ்வாதந்த்ர்யம் கூடும். அன்னவர்கள் புருஷர்களுக்கு அடிமையல்ல; ஸமாநமான அந்தஸ்துள்ளவர்கள்தாம். புருஷனுக்கு மூத்த தாரம் தவறிவிட்டால் மறுபடியும் ஸ்த்ரீகளை மணந்து கொள்வது போல், ஸ்த்ரீகளும் தமது கணவன் தவறிவிட்டால் மீண்டும் வேறு கணவனை மணந்து கொள்வதில் என்ன ஆக்ஷேபணை யிருக்கிறது? தேரடியில் மஹோத்ஸவ ஸமயங்களில் பள்ளு பறை சக்கிலி ப்ராம்மணர்கள் எல்லோரும் ஜாதி பேதமின்றி ஒன்று கூடுவதுபோல, எப்பொழுதுமே எல்லா ஜாதியரும் வ்யத்யாஸமின்றி ஒன்று கூடி இருப்பதே ஏற்றது. அப்பொழுது தான் இந்த நமது தாய் நாடு முன்னேற்ற மடையும். தர்ம சாஸ்த்ரங்கள் அந்நாளுக்கு ஏற்றவண்ணம் எழுதப்பட்டன. அவைகள் இக்காலத்துக்கு ஏற்றவைக ளல்ல; ஸமயத்திற்குத் தக்கவண்ணம் அவைகளைப் புதிப்பிக்க வேண்டும். வீடு கட்டினால் அடிக்கடி ரிபேர் செய்வதுபோல் பண்டை நாட்களில் செய்யப்பட்ட இந்த க்ரந்தங்களையும் புதியவர்கள் தக்கபடி சீர்திருத்த வேண்டும். செம்மறியாடு போல் முன்னோர்கள் போன வழியே ஏனையர் செல்வது மனிதர்களுக்கு அழகல்ல. இது ம்ருகத் தன்மையைக் காட்டும். ஸ்திரீகளும்கூட பெருஞ்சுமை போன்ற கூந்தல் பாரத்தைத் தாங்கவேண்டுவதில்லை. இக்காலத்து நாகரிகத்தை அநுஸரித்துக் கத்தரியினால் ஒழுங்காகக் கத்தரித்துக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட துருபதேசங்களைச் செய்பவர்கள் மஹான்களாம். இவர்கள் வார்த்தைகளை வேத வாக்யங்களைப்போல் கேட்டு ஆதரிக்கிறார்கள் சிலர். எவ்வித ந்யாயங்களை எடுத்துக் காட்டினாலும் இந்த மூடர்களுடைய புத்தி திரும்புவதில்லை. அவர்களையே பலபடியும் கொண்டாடுகிறார்கள். அவர்கள் வார்த்தையைக் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தான் உதவி புரிகின்றனர். அவர்களோடு தான் உல்லாஸமாக உலாவுகிறார்கள். அவர்களையே கௌரவிக்கிறார்கள். அதிகமாகச் சொல்வதால் யாது பயன் ? அவர்களையே பேசுந் தெய்வமாகப் பாவிக்கிறார்கள். தெய்வப் பிறப்பு வாய்ந்தவர்களென்றே செய்கையினாலும் காட்டுகின்றனர். ஐயோ! பாவம்! இப்படிப்பட்ட கஷ்டம் இந்திய பூமிக்கு வந்ததற்கு யாது காரணமென்று ஆராய்ந்து பார்க்குமிடத்து, தெய்வ வ்யாகோபமென்றே சொல்லத் துணிகிறேன். இந்தக் கலி மஹா புருஷ மத தேசிகர்களுக்குள் ஒரு மஹா புருஷர் இங்கு திருசிரபுரத்தில் விஜயம்செய்து நாஷனல் காலேஜில் சற்று நேரம் வந்திருந்து ஸபையில் உள்ளோர்களைப் பார்த்துச் சொன்ன சொற்களாவன:—

"ஏ! ஹிந்து மதாபிமானிகளே! என்னைக் குறித்து இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாஷையினால் ச்லோகங்களை இயற்றி வந்த ஸோபசாரப் பத்ரிகையைப் படித்தீர்களே. இதன் கருத்து யாருக்காவது விளங்கிற்று ? இல்லையே. ஆகவே இந்தப் பாஷையில் பயில்வது வீண் தானே. இனி, இதுபோன்ற பாஷைகளில் பயின்றுவரும் வழக்கத்தை விட்டு விட்டு, ஹிந்தியில் உழைத்து வாருங்கள். எல்லா நன்மையையும் அடைவதற்கு அதுதான் உங்களுக்கு ராஜ மார்க்கம். தரித்ர நாராயணன் இதோ வந்திருக்கிறான். இவன் வறுமைத்தனத்தை நீக்குங்கள். கையை நீட்டுகிறான்" என்று சொல்லிக் கையை நீட்டினவுடன் அங்கிருந்த பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 1750 ரூ. கோட்டுக்க ளடங்கிய ஒரு மணி பர்ஸை அவர் கையில் கொடுத்தார்கள். மறுதினத்தில் புத்தூர் மைதானத்தில் ஒரு கூட்டம் கூட்டி 5000 ரூபாயைக் கொடுத்தார்கள். லாலு குடியில் 2000 ரூ. கொடுத்தனர். ஆக இரண்டு தினங்களுக்குள் அவருக்குக் கிடைத்தது ரூ. 10000. இப்படிக் கொடுத்தவர்களுக்கு அவர் என்ன உதவி புரிந்தார்? இவர்கள் கொடுத்ததையாவது அவர் மதித்தாரா? ஒன்றுமில்லை. இவர்களாவது அவர் யோக்யதையை இன்னதென்று அறிந்து கொண்டார்களா? அதுவும் இல்லை. "மதாநுமதிகொஜ்யோகொ நஜ்யோகஃவாரூஜாயிஜகஃ" என்று சொல்லுகிறபடி யாரோ ஒருவன் போகிறானென்று எல்லோரும் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்களே ஒழிய, உண்மையை ஒருவனும் அறிந்து செய்தானில்லை. இத்தகைய மௌட்யம் நிறைந்த உலகில் கலி மஹாநுபாவனுடைய மஹா மந்த்ரிகள் எந்த ஆட்சியைத்தான் செய்யார்கள்? எல்லாம் ஸம்பவிக்கத் தக்கதே. வர்ணாச்ரம தர்மங்கள் அவ்வளவாக ஆதரிக்கத் தக்கனவல்ல. அசுத்தர்களாகவும் மத்யம் மாம்ஸம் இவைகளைப் புஜிக்கிறவர்களாகவும் இருக்கும் வேறு ஜாதியர்களை அணுகக் கூடாது, தொடக் கூடாது என்பது தப்பாம்.

அவர்களுடன் நெருங்கிப் பழகுவது தான் மனிதத்தன்மைக்கு அழகு என்று மஹாத்மாக்கள் சொல்லும் பிதற்றல்களை வேத வாக்யங்கள் போலெண்ணிப் பேதைகள் களிக்கிறார்களே! இவர்களுக்கு, அசேதநங்களாக இருக்கிற மரம் செடிகளுக்கு இருக்கும் அறிவு கூட இல்லையே! வீட்டுக்குப் புறம்பாக இருக்கும் தீட்டுக்காரிகள் பக்கலில் அணுகினாலும், அவர்களுடைய நிழல் தாக்கினாலும் உடனே அடியோடு காய்ந்து போகிற கருவேப்பிலை மரங்களையும் கொடி மல்லிகைச் செடிகளையும் பார்த்தாவது இந்தப் புத்தி ஈனர்கள் இந்த விஷயத்தில் தெரிந்து கொள்ளலாகாதா? சாஸ்த்ரத்தில் செப்பிய விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்படாத உயிரில்லாத மரம் செடி கொடிகள் கூட இவ்வண்ணம் தீண்டாமையை ஆதரிந்து மண்ணுலகில் மகிழ்ந்து வாழக் கண்ணுற்றிருக்க, எவ்வண்ணம் சாஸ்த்ர வச்யர்களான சேதநர்கள் தீண்டாமையை விலக்கலாம்? எல்லோரும் ஸமமாக இருக்க வேண்டும் என்பது ஈச்வரனுக்கே ஸம்மதமன்று. வேறுபாடு ஒவ்வொரு விஷயங்களிலும் இருப்பது ஆவச்யகமே. உலகத்தில் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியே அப்படி அமைந்துள்ளது. நாம் நன்றாகக் கவனிப்போமேயானால் இது ஒன்றே நமக்கு ஈச்வரனுடைய அபிப்ராயத்தைத் துலக்கிக் காட்டுகிறது. அது எது என்று வினவினால், உலகின்கண் வஸித்துவரும் ஒவ்வொரு மனிதனுடையவும் வேற்றுருவமே. எல்லா ப்ராணிகளுக்கும் கை கால் மூக்கு நாக்கு செவி முதலிய இந்த்ரியங்களும் உறுப்புக்களும் பொதுவாக இருந்த போதிலும், ஒவ்வொன்றிலும் வேற்றுமையே குடி கொண்டிருக்கிறது. இதை நிதர்சநமாகக் கொண்டே உலகில் வேற்றுமைப்பாடென்பது ஈச்வரனுடைய ஸங்கல்பமென்று அறியத்தக்கது. ஆதலால் ஜாதி வர்ணாச்ரம ஸம்பந்தமான வேறுபாடு கால்பநிகமென்று சொல்பவர்களின் பேத்தல் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் அவச்யமிருக்கவேண்டுமென்று சொல்லும் புத்திசாலிகளுடைய வசநம் எந்த மட்டில் ஸரி என்பதைக் கவனிப்போம். ஸ்த்ரீகளுடைய ஸ்வபாவத்தையும் இயற்கை அமைப்பையும் கவனித்தே தர்ம சாஸ்த்ர கர்த்தாக்கள் அந்த ஜாதிக்குப் பாரதந்த்ர்யம் தான் தகுந்ததென்றும், ஒரு ரக்ஷகனுக்கு உட்பட்டே இருக்கவேண்டுமென்றும் வ்யவஸ்தையைச் செய்து பெரியோர்கள் உலகத்தை நிலை நிறுத்தி இருக்கின்றார்கள், அவ்வாறான நிலைமையில் அந்த ஜாதியைக் கட்டுப் படுத்தியிருப்பதால் கற்பழியாமல் ஸத்ஸந்ததியானது இதுகாறும் உலகத்தில் வ்ருத்தியடைந்து வருகிறது.

நமது நாகரிகத்துக்கும் மேனாட்டு நாகரிகத்துக்கும் எத்தனையோ வாசி உண்டு. நமது நாகரிகம் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது; எக்காலத்திலும் நமக்கு ஹிதகரமானது; வைத்ய சாஸ்த்ரத்திற்கும் ஸதாசார நூல்களுக்கும் மிகப் பொருத்தமுள்ளது; ஒருவராலும் அருவருக்கத் தக்கதல்ல; நமது நாகரிகவாழ்வு, அந்யர்கள் யார் பார்த்தாலும் கேட்டாலும் சந்தோஷிக்கத் தக்கது. நாமும் இப்படியே ஆசரிக்க வேண்டுமென்று ஆசையை உண்டுபண்ணும் தன்மை வாய்ந்துள்ளது; கால வைஷம்யத்தால் நம் இந்தியர்களுக்கு அயல் தேசத்து ஜநங்களின் நடை உடை பாவனைகள் சிறந்தவைகளென்றும், மிக்க நாகரிகமுள்ளவைகளென்றும், நம்முடையவை அஸாரங்களென்றும் மனத்தில் தோன்றி இருக்கின்றது. எல்லாம் வல்ல இறைவன்தான் இந்த அநர்த்தகரமான மதிமயக்கத்தை நீக்கி நல்லறிவு புகட்டத் திறமையுள்ளவன். "கலிஜாத பஹ்வம்ஹோ வைகல்ய ஷிதா ஸம்ஹதி" என்கிற வசநத்தை உள்ளத்தில் கொண்டு பகவத் கருணையை எதிர்பார்த்திருக்கிறோம். எந்தப் பாஷையில் தர்மங்கள் ஆசாரங்கள் அநுஷ்டாநங்கள் முதலியவை ஸவிஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பாஷையை முகர்ந்துகூடப் பார்க்கத் திறமையில்லாத ஒரு மனிதனை உபதேஷ்டாவாகப் பாவித்து அவன் காலடியிலிருந்துகொண்டு ஸநாதந தர்மங்களை ஜநங்கள் கேட்பதென்றால் இதைவிட உலகத்துக்குத் தீமை வேறு என்ன வேண்டும்? இப்படிப்பட்ட துராசாரங்களையும் துர்மதங்களையும் போதிக்கிறவருக்கு 'மஹாந்' என்ற பிருதைக் கொடுத்த மஹாந்கள் எவர்களோ அறியோம்! கலியின் அபிவ்ருத்திக்கு அடையாளம் யாது என மைத்ரேயர் வினவ, பராசரர் "யதா யதா ஹி மைத்ரேய ஹாநிர் தர்மஸ்ய லக்ஷ்யதே । ததா ததா கலேர் வ்ருத்தி ரநுமேயா மஹாத்மபி: । யதா யதா ஸதாம் ஹாநிர் வேதமார்காநுஸாரிணாம் । ததா ததா கலேர் வ்ருத்தி ரநுமேயா விசக்ஷணை: ॥" என்றார். [இவற்றின் பொருள்: "மைத்ரேய! எந்தெந்தக் காலத்தில் தர்மத்துக்கு ஹாநி உண்டாகுமோ அந்தந்தக் காலத்தில் கலியின் வ்ருத்தியானது மஹாத்மாக்களால் ஊஹிக்கத்தக்கது. வேத மார்க்கத்தை அநுஸரித்து நடப்பவர்களான ஸாதுக்களுக்கு எந்தெந்த ஸமயங்களில் ஹாநி உண்டாகுமோ அந்தந்த ஸமயங்களில் ஸமர்த்தர்களால் கலியின் வ்ருத்தியானது ஊஹிக்கத் தக்கது.] இதற்கு முன் கேட்டிராததும் கண்டிராததுமான விஷயங்களின் ஸம்பவமானது கலியின் அபிவ்ருத்தியை நன்கு விளக்கிக் காட்டுகிறது. மஹர்ஷிகள் ஸர்வஜ்ஞர்களன்றோ? அந்த மஹாபுருஷர்கள் வாக்கு வீணாக ஆகுமோ? வஸிஷ்டருடையவும் புலஸ்த்யருடையவும் விசிஷ்டாநுக்ரஹத்தினால் பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநத்தையும் புராண ஸம்ஹிதா கர்

த்ருத்வ சக்தியையும் பெற்ற ஸ்ரீபராசர பகவான் திவ்ய சக்ஷுஸ்ஸால் பின் வரப்போவதை நன்கு உணர்ந்து முந்தியே தமது க்ரந்தத்தில் எழுதி யிருக்கிற விஷயங்களன்றோ இவை? கலி மஹா புருஷனுடைய கிங்கரர்கள் தங்களுடைய செய்கைகளால் பராசர பகவானை ஸர்வஜ்ஞரென்று கொண்டாடும்படி செய்ததற்காக இவர்களிடத்தில் நாம் நன்றி பாராட்டுவோமாக.

இவ்வண்ணம் இந்த யுகமானது இகழத்தக்கதாக இருந்தபோதிலும், தர்மமானது அத்யல்பமாகச் செய்யப்பட்ட போதிலும், இக்காலத்தில் பெரும்பயனை விளைவிக்கிற தாதலால் இவ்யுகம் மிக்க புகழ்வாய்ந்ததென்றே மஹர்ஷிகள் கூறியிருக்கின்றனர். மேலும், முறையே க்ருதம் த்ரேதை த்வாபர யுகங்களில் த்யாநம் ஜபம் யஜ்ஞம் இவைகளால் எந்தப் பலன் நெடுங் காலத்தினால் ஸித்திக்குமோ அந்தப் பயனானது இந்தக் கலியினால் பகவானுடைய நாம ஸங்கீர்த்தந ரூபமான அல்பாயாஸத்தினால் ஸித்திப்பதால் இந்தயுகம் மிகப் புகழத்தக்கதென்றும் அபிஜ்ஞர்கள் கூறி இருக்கின்றனர். மேலும் "யோஷித ஸாது தந்யா:" என்று ஸ்ரீ பராசர பகவான் கூறி யிருக்கிறார். ஏனெனில் அதிகமான சரீராயாஸத்தினாலும் தந வ்யயத்தாலும் ஸாதிக்கத்தகுந்தவைகளான ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களையும் நியம விசேஷங்களையும் வ்ரதோபவாஸாதிகளையும் ப்ராயச்சித்தங்களையும் புருஷர்களைப்போல் செய்யாமலே எளிதில் த்ரிகரணங்களால் செய்யப்படும் பர்த்ரு சுச்ரூஷையினாலேயே பரலோகத்தில் பர்த்ரு ஸாலோக்யத்தை அடைவதாலும், இம் மண்ணுலகுக்கும் 'தர்ம பத்நீ, பதிவ்ரதை' என்கிற கீர்த்தியைப் பெறுவதாலும், ஸ்திரீ ஜந்மம் இக்காலத்தில் மிகச் சிறப்புற்றது. "ஸம்ஸ்த்ரீஹாந யுகஸம்ஸ்த்தவிதை: ப்ராப்ய ந ஸம்ப்ராப்யம் ஸாஸ்த்ரோக்தம் ப்ராப்தம் ஸத்வ்ருத்தி விஷய: ஸாத்ய ஸ்வல்ப ஸ்வாநாப்தம் ஸவி | ஸமஸ்தாய வஸ்த்ராவதந்தம் ஸம்ஸ்தாபத்யஜ்ஞா விதே யஜ்ஞா ஸாஜ நிமேஷாஹ்வி ஹ்ருஸ்வா ஸ்வல்பாவஹோயம் கலி: |" என்று இக்கலியின் கொடுமையைக் கண்டு பயந்த ஒரு மஹா புருஷன், உள்ளது உள்ளபடி இக் கலியை நன்கு அநுபவித்துத் தான் அநுபவித்தவண்ணம் இக்கலியின் மஹிமையை இந்த ச்லோகத்தால் வெளியிட்டார். ஆகவே நான், ஆஸ்திகர்கள் அனைவர்களையும் நோக்கி, இக் கலிகால கோலாஹலத்தி லிருந்து நம்மையும் நம்மவர்களையும் காப்பாற்றிக் கொள்வதற்கு உரித்தான வழி எது உண்டோ அந்த வழியில் நாமும் நடந்து கொள்வதுடன், நம்மவர்களையும் நடப்பிக்க வேண்டும் என்றும், "யத்யதாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந: | ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்தத் அநுவர்த்ததே" என்கிற கீதாசார்யனுடைய வசநத்தை உள்ளத்தில் நன்றாகப் பதியச் செய்து கொண்டு, நம்முடைய வர்ணாச்ரம தர்மங்களையும் குல தர்மங்களையும்

ஜாதி தர்மங்களையும் சிஷ்டாசாரங்களையும், தொன்று தொட்டு நம்மால் ஆண்டு வரப்பட்ட நடை உடை பாவனைகளையும், இவைகளினும் முக்யமான சிகா யஜ்ஞோபவீத தாரணங்களையும் தவறாமல் காப்பாற்றி வருவதில் ச்ரத்தை இருக்கவேண்டுமென்றும், முக க்ஷௌரம் ஆத்ம க்ஷௌரம் அபோஜ்ய போஜநம் அபேயபாநம் அஸ்ப்ருச்ய ஸ்பர்சநம் முதலிய துஷ்க்ருத்யங்களைத் தவறாமல் விலக்கி, எக்காலத்திலும் ஹிதகரமான காயத்ரீ மஹாமந்த்ர ஜபத்தையாவது உரிய காலங்களில் செய்துகொண்டு, ஸ்வதர்மங்களில் நிலை பெற்றுப் பூமி தேவர்கள் நீடூழி காலம் வாழ்ந்திருக்கும்படி எல்லா மறிந்த ஸர்வேச்வரன் கருணை புரியவேண்டுமென்று அநவரதம் பரமபுருஷனை ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன் என்பதை வணக்கத்துடனும் பக்தியுடனும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

*ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை உபந்யாஸ ஸங்க்ரஹங்கள்.

(1) ஸ்த்ரீ தர்மம்.

பகவத் ஸ்ருஷ்டி நான்கு விதம். அவையாவன: தேவர்கள், மநுஷ்யர்கள், திர்யக்குகள், ஸ்தாவரங்கள். ப்ரளயத்தில் உறைமெழுக்குப் போன்றிருக்கும் ஜீவாத்மாக்களை, அவை உஜ்ஜீவித்து மோக்ஷஸாதநம் பெறும்பொருட்டுப் பரமாத்மா அவைகளின் பூர்வ கர்மாநுரூபமாக தேஹேந்த்ரியாதிகளைக் கொடுத்து மேற்சொன்னபடி ஸ்ருஷ்டிக்கிறான்; பஞ்ச மஹா பாதகிகள் முதலானவர்களை இருள் சூழ்ந்த ஜ்ஞாநமில்லாத ஜந்மாக்களான புல் பூண்டுகளாகவும், அதிற் குறைந்த பாபிகளை அவைகளைக் காட்டிலும் மேன்மையான பசு பக்ஷி ஊர்வன முதலிய திர்யக்குகளாகவும், புண்யவான்களை விவேகத்தோடு கூடின மநுஷ்யர்களாகவும், அதிலும் உத்க்ருஷ்ட புண்யம் செய்தவர்களை தேவ ஜாதிகளாகவும் ஸ்ருஷ்டிக்கிறான். மேற்சொன்ன நான்கு ஸ்ருஷ்டிகளிலும் ஸ்த்ரீ புமான்கள்என்கிற பேதமுண்டு. ஜீவாத்ம ஸ்வரூபங்களில் "நைவ ஸ்த்ரீ ந புமாநேஷ:" என்கிற உபநிஷத்தின்படி ஸ்த்ரீ புமான்கள் என்கிற பேதம் கிடையாது.

* கோயம்புத்தூரில் புத்தகக்கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் 23—11—27லும், 24—11—27லும் செய்யப்பட்டவை.

கலியுகத்தில் ஸ்திரீ ஜந்மம் ஒருவாறு உயர்ந்ததென்றே சொல்ல வேண்டும். ஸ்ரீ வ்யாஸ பகவான் கங்கையில் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கும் பொழுது கலியுகத்தின் கொடுமைக்குப் பயந்து ஸம்சயம் கேட்கவந்த மஹர்ஷிகளுக்கு "கலி: ஸாது:", "ஶூத்ர: ஸாது:", "ஸ்த்ரிய: ஸாத்வ்ய:" என்று சொன்னார். ஏனென்றால் எந்தத் தர்மாநுஷ்டாநத்தை க்ருத யுகத்தில் பத்து வர்ஷம் செய்தால் புண்யமும் புருஷார்த்தமும் லபிக்குமோ அதையே த்ரேதாயுகத்தில் ஒரு வர்ஷத்திலும், த்வாபர யுகத்தில் ஒரு மாஸத்திலும், கலியுகத்தில் ஒரே நாளிலும் செய்தால் கிடைக்கும். எந்தப் பலத்தை த்ரைவர்ணிகர்கள் கடினமான வர்ணாச்ரம தர்மங்களைச் செய்து கர்மயோக ஜ்ஞாந யோகத்தோடு கூடின பக்தியை ஆச்ரயித்து ஸாதிக்கவேண்டியதோ அதை சூத்ர ஜாதியில் பிறந்தவன் எளிதில் ஆர்த்தியுடன் செய்யப்படும் நாம ஸங்கீர்த்தநத்தால் ஸம்பாதிக்கிறன் ஆகையால் சூத்ர ஜந்மம் உயர்ந்தது. எந்தப் பலத்தை மேற்கூறியபடி விசேஷ ச்ரத்தையுடன் புருஷன் செய்து ஸம்பாதிக்க வேண்டியதோ அது பதிசுச்ரூஷை முதலான பாதிவ்ரத்யத்தால் எளிதில் ஸ்த்ரீகளுக்கு லப்தமாவதால் ஸ்த்ரீ ஜந்மா உயர்ந்ததாகும்.

புருஷர்களுக்கு அவச்யம் செய்யவேண்டுமவையான ஷட்கர்மங்கள் ஸ்த்ரீகளுக்கு வேண்டுவனவில்லை. ஆத்ம க்ஷேமத்தை உத்தேசித்த ஸுமங்கலிகள் கங்கை முதலிய தீர்த்த யாத்ரை, திவ்ய க்ஷேத்ரங்களுக்குப் போய் அர்ச்சாவதார வைபவங்களை ஸேவிப்பது, வைதிக மந்த்ர ஜபம் (அஷ்டாக்ஷர ஜபம் உபதேசம் பெற்றவர்கள் செய்ய வேணும்) தபஸ், வேத மந்த்ரங்களுடன் பகவதாராதநம், யாகம் முதலியவைகளை அநுஷ்டிக்கக் கூடாது. பதியுடன் அவருடைய சுச்ரூஷைக்காக ஸஹகாரியாயிருந்து இவைகளை அநுஷ்டிப்பது உசிதம். "ஸ்த்ரீணாம் பவித்ரம் பரமம் பதிஶுஶ்ரூஷணம் ஸதா" என்கிறபடி பதி சுச்ரூஷையே ஸர்வ பாபங்களையும் போக்கி ஸகல வித ச்ரேயஸ்ஸையும் ப்ராபிக்கும். ஸ்த்ரீகள் முதலானோர் வேதோச்சாரணம் செய்யக்கூடாவாதலால், அவர்களுடைய உஜ்ஜீவநத்திற்காக வேதார்த்த கும்பிதங்களான பாரதத்தை ஸ்ரீ வேதவ்யாஸரும், திருவாய்மொழி ப்ரபந்தங்களை ஆழ்வாராசார்யர்களும் அருளிச் செய்தார்கள். ஸுமங்கலிகள் ஸூர்யோதயாநந்தரம் ஸ்நாநம் செய்யவேண்டும்; ஏகாதசி உபவாஸம் இருக்கக்கூடாது. இருந்தால் "ஆயுஷ்யம் ஹரதே பர்த்து:," "நரகம் வ்ரஜேத்" என்கிறபடி ப்ரத்யவாயங்களும் ஸம்பவிக்கும். கீதையில் 'என்னை ஆச்ரயிக்கிற ஸ்த்ரீ மோக்ஷத்தை அடைகிறாள்' என்பதின் அர்த்தம், தங்களுக்கநுரூபமான தர்மாநுஷ்டாநத்துடன் கூட ஈச்வரனை ஆச்ரயித்தால் மாத்ரம் மோக்ஷம் ஸித்திக்கும் என்பதே யொழிய பர்த்ரு சுச்ரூஷாதிகளை விட்டு ஈச்வரனை யாச்ரயித்தால் மோக்ஷம் லபிக்காது என்பதல்ல. இதைக் கீதையில் 18-வது அத்யாயத்தில் "ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத:" என்பது முதலாக ஸ்ரீ கீதாசார்யன் வெளியிட்டிருக்கிறான். இது தர்ம சீலைகளான அருந்ததி த்ரௌபதி முதலியவர்களின் சரிதங்களால் விளங்கும். "யச்ச புண்யம் ஸதா பர்த்து: தஸ்யார்தம் ஸமவாப்னுயாத்" என்கிற ஸ்ம்ருதி வசநத்தின்படி பர்த்தா செய்யும் புண்யங்களில் பாதி பத்நிக்குக் கிடைப்பதுடன் "பர்த்தாரம் ஸ்த்ரீக்ருதம் பாபம்" என்கிறபடியே இவளுடைய பாபங்கள் முழுவதும் புருஷனை யடைகிறது. ஆகையால் தான் சாஸ்த்ரங்களில்

185794 சென்னை-600 ...

ஸ்த்ரீகளுக்கு, இக்காலத்தார் விரும்பும் அதிகமான ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கப்படவில்லை. இப்படி "ஸ்த்ரீக்ருதம் பாபம் பர்த்தாரம்" என்கிறபடி ஸ்த்ரீகளின் பாபங்களை யெல்லாம் வாங்கிக்கொண்டு தன் பாதி புண்யத்தையும் கொடுக்கும் புருஷனை யார்தான் பூஜிக்க மாட்டார்கள்? "பர்த்தா ஹி பரமம் நாரீணாம் பூஷணம் பூஷணைர்விநா! ஏஷா விரஹிதா தேந" என்கிறபடி பர்த்தா நற்குணங்களில்லாதவனாகவும், தரித்ரனாகவும், ப்ரியமில்லாதவனாகவும், "கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்" என்கிற அருளிச் செயலின்படியே கண்டார் இகழத்தக்க விதம் பரிபவம் செய்தாலும் கொண்டவனை ஏத்திச் சுச்ரூஷை செய்வது பதிவ்ரதையின் கடமை. அப்படிச் செய்தால் தான் பகவான் ஸ்த்ரீகளுக்கு அநுக்ரஹம் செய்கிறார். பதிவ்ரதையின் லக்ஷணம் "ஆர்த்தார்த்தே முதிதா ஹ்ருஷ்டே ப்ரோஷிதே மலிநா க்ருஶா। ம்ருதே ம்ரியேத யா நாரீ ஸா ஸ்த்ரீ ஜ்ஞேயா பதிவ்ரதா", "பதிதம் தைவதம் பதி:" என்பவை. இப்படியே நடந்துவந்த ஸீதாபிராட்டியைப் போன்றவர்கள் பதிவ்ரதையாவதுடன், "ப்ராணேப்யோபி ப்ரியதரா" என்கிறபடியே ஸஹதர்ம சாரிணியானதால் தார்மிகரான பர்த்தாக்களால் புகழும் பெறுவார்கள்.

யுகாந்தரங்களில் ஸ்த்ரீகளுக்கு ஸந்த்யாவந்தநம் வேதாத்யயநம் தபஸ் உபநயநம் முதலியவை உண்டென்றும், புருஷன் இறந்தாலும், வஸிக்குமிடம் தெரியாமற்போனாலும், பதிதனானாலும், நபும்ஸகனாயிருந்தாலும் இஷ்டப்பட்டால் அவர்கள்வேறு கல்யாணம் செய்து கொள்ளலாமென்று மிருந்தது. ஆகையால் தான் யாஜ்ஞ்யவல்க்யருடைய இளைய பார்யையான கார்க்கி என்பவள் அச்லீலமான ஸம்பத்து மோக்ஷத்தைக் கொடுக்காதென்று பர்த்தாவினிடம் தெரிந்து, அவர் ப்ரவ்ரஜிக்கு முன் அவர் சொத்தில் பாகம் வேண்டாமென்று மூத்த பார்யையான காத்யாயநிக்கு அதை விட்டுவிட்டு மோக்ஷஸாதநமான ப்ரம்ஹ வித்யையை அப்யஸித்தாள் என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஹநுமான், அசோகவநத்தில் நதிக்கரைக்கு ஸந்த்யாவந்தநம் செய்ய ஸீதை வருவாள் என்று எதிர் பார்த்ததுக்கும் இதுவே காரணம். சாண்டிலி என்பவள் ஜுகுப்ஸிதமான ஓர் இடத்தில் தபஸ்செய்து கொண்டிருந்ததைப் பார்த்து, அவளை வேறு நல்ல இடத்திற்குக் கொண்டு போய்விட உத்தேசித்த கருடாழ்வானுக்கு இறக்கைகள் வெந்து உதிர்ந்தன. நாரத பகவான் "அப்படி எண்ணுவது கூடாது; ப்ரஹ்ம வித்தான ஸ்திரீகளோ புருஷர்களோ இருக்குமிடமே புண்யக்ஷேத்ரம்; ஆகையா லவர்கள் வஸிக்குமிடத்தை இகழ்வாக நினைப்பதுமே அபசாரமாகும்:" என்றும் "அதன் பலனை நீர் நேரில் அநுபவித்தீர்" என்றும் கருடனுக்கு உபதேசித்தார். விவாஹமில்லாமல் ப்ரம்ம வாதிநிகளாக ஸ்த்ரீகள் இருக்கலாமென்பது யுகாந்தரங்களி லுண்டு.

மஹாபாரதம் ஆரண்ய பர்வத்தில், 16000-க்கு மேற்பட்ட பார்யைகளையுடைய ஒரு பர்த்தாவை, ஸந்தோஷப்படுத்த முடியாத அவர்களுள் ஒருத்தியான ஸத்யபாமை, "ஐந்து பர்த்தாக்களுக்கும் பத்நியாக இருந்து எல்லாரையும் ஸந்தோஷப் படுத்துவது எப்படி? எந்த மணி மந்த்ர ஔஷதங்களால் நீ ஸாதிக்கின்றாய்? என்று த்ரௌபதியைக் கேட்டபொழுது, "மணியால் ஜ்ஞாநிகள் மோஹிக்க மாட்டார்கள்; மந்த்ர ப்ரயோகத்தால் பர்த்தாவுக்கு சித்த ப்ரமம் உண்டாகும்; மருந்தால் வ்யாதியும் மரணமும் ஏற்

பமும் ; ஆகையால் இவைகளால் விபரீதம் ஸம்பவிக்குமே யல்லது பர்த்தாவை ஸ்வாதீநம் செய்துகொள்ள முடியாது. ஆகையால் க்ருஹத்தில் கொண்டுவந்து போடப்படுமே த்ரவ்யம் சாமான்கள் இவைகளிலும், மாமியார் அதிதிகள் வைதிக க்ருத்யங்கள் இவைகளில் பர்த்தாவின் எண்ணப்படி நடந்து கால தேச வர்த்தமாநத்தை யொட்டிப் பதி சுச்ரூஷை செய்வதும், அஸூயை இல்லாமல் சக்களத்திகளை நடத்துவதும், இவை முதலான நல்ல கார்யங்களால்தான் பர்த்தாக்களுடைய ப்ரியத்தை ஸம்பாதிக்க வேணும்" என்று சொன்னாள். "ம்ருஹிணீ ம்ருஹமுச்யதே" என்று சொல்லுகிறபடி வீட்டிற்குள் ஸ்த்ரீயேதான் எஜமானி. "யத்ர ஸ்த்ரீ பூஜ்யந்தே ரமந்தே தத்ர ஸ்ரீ:" என்றும், "ஸந்துஷ்டோ பார்யயா பர்த்தா" என்றும், "பூஜா பூஜயிதவ்யா ச ஸம்யக் ஆபரணாதிபி:" என்றும் சொல்லுகிறபடி 'எந்த க்ருஹத்தில் ஸுமங்கலி ஸ்த்ரீகள் தங்கள் சக்திக்கு ஏற்ற நல்ல நகைகளாலும் வஸ்த்ரங்களாலும் நல்ல வார்த்தைகளாலும் மரியாதையுடன் ஆதரிக்கப்படுகிறார்களோ அந்த இடத்தில் லக்ஷ்மி வஸிக்கிறாள். அப்படி இல்லாத வீடு சூந்யம் வைத்த வீடு போலாகும்' என்று மநு சொல்லி யிருக்கிறார். ஆனாலும், ஸ்த்ரீகள் சஞ்சல புத்தியுள்ளவர்களும், அதிக காம ஸ்வபாவங்களை யுடையவர்களும், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்ற அபலைகளு மாதலால் ஸ்வதந்த்ரர்களாய் அவர்கள் மனம்போனபடியெல்லாம் விடக்கூடியவர்க ளல்லர். இவைகளை யுத்தேசித்தே ஸ்த்ரீகள் கௌமாரத்தில் பிதாவினிடமும், யௌவநத்தில் பர்த்தாவினிடமும், வார்த்தகத்தில் புத்ரனிடமும் அடங்கி இருக்க வேண்டுமென்று மநு சொன்னாரேயொழிய அவர்களை நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்றாவது ஸுகாநுபவங்களைக் குறைக்கவேண்டு மென்றாவது மஹர்ஷிகளில் ஒருவரும் சொல்லவில்லை.

ஸ்த்ரீகள் ஸந்மார்க்கத்தினின்று தவறிவிட்டாலும் மூன்றுதரம் அவர்களுக்கு ஸத்புத்தியை உபதேசித்து லகு ப்ராயச்சித்தங்களைச் செய்தல் வேண்டும்; பின்னும் அவர்கள் தவறி நடந்தால் அப்போது அவர்களை நீக்கி வேறு கலியாணம் செய்துகொள்ள வேணுமே யொழிய முதல் இரண்டு தடவைகளிலேயே அவர்களை விட்டுவிடக் கூடாது. (புருஷன் தவறி நடந்தால் அவனுக்கு முதல் தடவையிலேயே தகுந்த சிக்ஷைகளும் ப்ராயச்சித்தங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன.) ஆகையால், ஸ்த்ரீகள் தவறி நடந்தால் அவர்களைத் தள்ளிவிடவேணு மென்றாவது புருஷர்கள் தவறி நடந்தால் ப்ரத்யவாயமில்லை யென்றாவது எண்ணுவது தவறு. "அதுஷ்டாம் பதிதாம் பார்யாம் யௌவநே ய: பரித்யஜேத் । ஸ ஜீவநாந்தே ஸ்த்ரீத்வம் வந்த்யத்வம் ச ஸமாப்நுயாத்" என்றபடி துஷ்டையாயும் சொன்னபடி நடப்பவளும் யுவதியுமான பார்யையை ஒருவன் தள்ளிவைத்து வேறு விவாஹம் செய்துகொண்டால் அவன் ஏழுதடவை ஸ்த்ரீ ஜந்மத்தை எடுத்து அடிக்கடி விதவையாகக் கஷ்டங்களை யநுபவிக்க ப்ராப்தம்.

இதிஹாஸங்களில் அநேக பதிவ்ரதா ஸ்த்ரீகளுடைய விருத்தாந்தங்கள் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாஹ திநம் அருந்ததியை ஸப்தரிஷிக் கூட்டத்தில் நக்ஷத்ர மண்டலத்தில் வதூவரர்களைப் பார்க்கச் சொல்வது அவள் மஹா பதிவ்ரதையானதால் அவள் மாதிரி பதியை அநுவர்த்திக்க வேணுமென்பதைக் காட்ட. அநஸூயை 12 வருஷ க்ஷாமத்தில் எல்லோரும் மிக வருந்துங் காலத்தில் தன் தபஸ்ஸால் கங்கையையும் தாந்யாதிகளையும் தன் ஆச்ரமத்தில் வரவழைத்து அவர்கள் க்லேசத்தைப் போக்கினாள். மஹா பதிவ்ரதை யானதால் இப்படிச்செய்தல் கூடும். த்ரௌபதியின் பாதிவ்ரத்யத்துக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டுக் கண்ணபிரான் துயிலை வளர்த்த வைபவம் பாரதத்தில் ப்ரஸித்தம். இன்னும் பாதிவ்ரத்ய மஹிமையால் இறந்த பர்த்தாவைப் பிழைப்பு ஊட்டின ஸாவித்ரி முதலான மஹா பதிவ்ரதா சிரோமணிகளுடைய சரித்ரங்களால் நல்ல ஸ்த்ரீகளுக்குள்ள வைபவம் ப்ரஸித்தமாகும். ஆகையால், ஸுமங்கலிகளான ஸ்த்ரீகளுக்குப் பாதிவ்ரத்யமாகிற ஒரு தர்மமே இந்த லோகத்தில் விசேஷ ஸௌக்யத்தையும் மேன்மையையும் கொடுத்துப் பரலோகத்திலும் அளவற்ற ஆநந்தங்களைத் தருகிறது.

(2) கர்மாநுஷ்டாநம்.

'கர்மாநுஷ்டாநம் செய்ய வேண்டியது அவச்யமா ? கர்மாநுஷ்டாந மில்லாமலே மோக்ஷத்தை யடைய முடியுமா?' என்கிற விஷயத்தை விசாரிப்பதாக ஆரம்பித்து, முதலில் நமது பிரமாணங்களில் கர்மாநுஷ்டாந மில்லாமலே பக்தி ஜ்ஞாநாதிகளால் மோக்ஷமடையலாம் என்று தோன்றுவதால் அதை விமர்சிக்க வேண்டியது அவசியம் என்று சில பூர்வபக்ஷங்களைச் செய்து, அவைகளின் கண்டந ரூபமாய் ஸித்தாந்தங்களை ஸ்தாபிக்கிறோம்.

"ந கர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வமாநசு:" என்று உபநிஷத்துக்களிலும், "பக்த்யா த்வநந்யயா சக்ய:" என்று கீதாதிகளிலும் பக்தியே மோக்ஷ காரணமாக அறுதி இடப்படுவதாலும், "ருஷய: கில காவஷேயா: கிமர்தா வயம் அத்யேஷ்யாமஹே கிமர்தா வயம் யக்ஷ்யாமஹே" என்று கவஷி சிஷ்யர்கள் கர்மத்தை விட்டிருப்பதாகத் தெரிவதாலும், ஸ்ரீ கீதையில் "ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே" என்று ஜ்ஞாநத்துக்காகவே கர்மாநுஷ்டாநம் செய்யவேணும் என்று சொல்வதாலும், "பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்" என்று ச்ருதிகள் எல்லாக் கர்மங்களையும் விட்டுக் குழந்தைகளைப் போலிருக்க விதிக்கையாலும், ஸ்ரீ சுகர் ரிஷப தேவர்கள் கர்மாநுஷ்டாநங்களை விட்டு அவதூதர்களாய்த் திரிந்ததாக ஸ்ரீபாகவதாதிகளில் காண்கையாலும், உத்தவகீதையிலும் 'த்யஜ யுக்த யுக்தம்'', "தாவத் கர்மாணி குர்வீத ந நிர்வித்யேத யாவதா" என்றும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்றும் தர்மாநுஷ்டாநங்களை விட்டிருக்க விதித்திருக்கையாலும், தர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யமில்லாத ஸ்த்ரீ முதலானவர்களும் தன்னை ஆச்ரயித்து மோக்ஷம் பெறலாமென்று "மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய" என்பது முதலான ச்லோகங்களில் கீதாசார்யன் அருளிச் செய்திருப்பதாலும், சாஸ்த்ரவச்ய ரல்லாத கஜேந்த்ரனும் பக்தியால் முக்தியடைந்ததாக "ஸத்ர தாநேஷு ஹமவாந் மஜயமேவாய" என்று ஸ்ரீ பாகவதத்தில் அருளிச் செய்திருப்பதாலும், தர்மாநுஷ்டாந ப்ரஸக்தி சூந்யங்களான புல்லெறும்பாதிகளுக்கும் மோக்ஷம் கொடுத்ததாக ஸ்ரீமத்ராமாயணாதிகளில் காண்பதாலும், இதை ஆழ்வான் "ஸ்வாராத்ய ஸ்ஸுமதி தவய:" என்று தர்மாநுஷ்டாந மன்றிக்கே இருக்க, திர்யக் ஸ்தாவரங்களுக்குச் சரண்யன்

மோக்ஷம் கொடுத்ததாக அநுவிதித்திருப்பதாலும், இன்னும் பல ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் "தாமும் வாடவாடத் தவஞ்செய்ய வேண்டா" வென்று கர்மாநுஷ்டாநத்தை நிஷேதித்தது போல் காண்பதாலும், மோக்ஷார்த்திகளான பக்த ப்ரபந்நர்களுக்குத் கர்மாநுஷ்டாநமாவசியகமன்றென்று சிலர் ப்ரமிக்கலாம். இதற்கு ஸமதாநம்:ச்ருதி கீதாதிகளில் பக்தியாலேயே மோக்ஷம் பெறுவதாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அந்தப் பக்தியானது நித்ய கர்மாநுஷ்டாநத்தோடு கூடின கர்மயோகத்தை அங்கமாக வுடையதாகக் கீதையில் வ்யக்தமாக அருளிச் செய்திருப்பதால் கேவலம் பக்தியால் மோக்ஷம் ஸித்திக்க மாட்டாது. கவஷிசிஷ்யர்கள் மோக்ஷார்த்திகளாகையால் காம்ய கர்மங்களைத் தாங்கள் அவலம்பிக்கவில்லை என்று சொன்னார்களே யொழிய நித்ய கர்மங்களைக்கூட விட்டிருந்ததாக அவ் வாக்யங்களிலில்லை. இது, "யஜ்ஞேந தாநேந" என்று யாகத்தை நிஷேதித்ததாகச் சொல்லுகிற வாக்யங்களினால் தெரியவருகிறது. "ஜ்ஞாநே பரிஸமாப்யதே" என்கிற கீதா வாக்யத்தில், கர்மயோகமானது ஜ்ஞாந யோகத்தைப் பெறுவதற்காக அநுஷ்டிக்கப்படுவதாக ஸ்ரீ பாஷ்யகாரர் வ்யாக்யாநம் பண்ணியிருப்பதால் இது நித்ய கர்மாநுஷ்டாநத்தை விடுவதற்கு ப்ரமாணமாகாது. "பால்யேந திஷ்டாஸேத்" என்கிற ச்ருதியின் அர்த்தத்தை ஸ்ரீவேதவ்யாஸர் "அநாவிஷ்குர்வந் அந்வயாத்" என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தில், 'பக்தன் தன் மஹிமையை வெளிப்படுத்தாமல் இருப்பதே இங்குப் பால்ய சப்தத்தின் அர்த்தம்' என்று தீர்மானித்திருப்பதாலும் இப்படியே மூன்று பாஷ்யகாரர்களும் வ்யாக்யாநம் செய்திருப்பதாலும், நித்ய கர்மாநுஷ்டாநங்களை விட்டுக் குழந்தை போலிருப்பது பால்ய சப்தார்த்தமன்று. ஸ்ரீ ரிஷப தேவர் கர்மாநுஷ்டாநங்களை விட்டிருந்ததாகச் சொல்வது ஒரு ஸித்திவிசேஷம் என்று பூர்வோத்தர கதையால் தெரியவருவதாலும், சுகாதிகளும் கர்மாநுஷ்டாநங்களை விட்டிருப்பதாக வ்யக்தமாகச் சொல்லாததாலும், அம்மஹாங்கள் ஒரு ஸமயம் விட்டிருந்ததாகத் தெரிந்தாலும், அதைப் பார்த்து நாம் கர்மாநுஷ்டாநங்களை விட்டுவிடலாகாதென்பதை அதே பாகவதத்தில், ஸ்ரீ சுகரே "தேஜீயஸாம் வச ஸத்யம் ததைவாசரிதம் க்வசித் । தேஷாம் யத் ஸ்வவசோயுக்தம் புத்திமாம் ஸ்தத் ஸமாசரேத்" என்றும் மஹாங்களுடைய விபரீதாநுஷ்டாநங்கள் அவர்களுக்குத் தகுமேயல்லது அதைப் பார்த்து நாம் அநுஷ்டிக்கத்தகாது என்று அருளிச்செய்திருக்கிறார். இவ்வர்த்தம் கௌதம ஸ்ம்ருதியில் "த்ருஷ்டோ தர்மவ்யதிக்ரம: ஸாஹஸம் ச பூர்வேஷாம் தத் அந்வீக்ஷ்ய ப்ரயுஞ்ஜாந: ஸீததி அவர:" என்று சொல்லப்பட்டிருப்பதால் சுகர் போன்ற மஹாங்களுடைய அநுஷ்டாநம் நம் தர்மத்தை விடுவதற்கு ப்ரமாணமாகமாட்டாது. உத்தவ கீதையிலும் சொன்னது காம்யகர்ம விஷயம். கஜேந்த்ராதிகளும் புல்லெறும்பாதிகளும் ஜந்மாந்தரத்தில் ஸித்தியடைந்தவைகளாகையால் விரோதமில்லை. ஸ்ரீகீதையில் சொன்னது ஸ்த்ரீ முதலானவர்களும் அவர்களுக்கு யோக்யமான கர்மாநுஷ்டாநத்துடன் கூட ஈச்வரனை யாச்ரயித்தால் மோக்ஷம் ஸித்திக்குமேயன்றி அதை விடுவதற்கு ப்ரமாணமாகாது. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பக்தியோகத்தை அநுஷ்டிக்க முடியாதவன், அதை விட்டு ப்ரபத்தியைப் பண்ணும்படி சொல்லியிருக்கிறதே யொழிய நித்யகர்மாநுஷ்டாநங்களை விடச் சொன்னபடியன்று. "காயோடு

நீடு கனியுண்டு ....ஐந்து தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா" என்கிற பாசுரத்தாலும் மற்றும் நித்யகர்மாநுஷ்டாநங்களைச் செய்துவரும் ப்ராம்மணர்களை ஸ்துதிக்கிற, "திசைமுகனை யனையவர்கள் செம்மை மிக்க" என்பது முதலான வாக்யங்களாலும் ஸித்தம்.

இது நிற்க, ஒருவனுக்கு ஜ்ஞாந பக்திகள் அதிகமாக இருந்தாலும், சாஸ்த்ரத்துக்குக் கட்டுப் பட்டே நடக்கவேணுமென்றும், விபரீதாசாரமுள்ளவன் எவ்வளவு பக்திமானாக இருந்தாலும் அவன் மோக்ஷத்தை யடையமாட்டானென்றும் ச்ருதி ஸ்ம்ருதிகள் உபதேசிக்கின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் அச்வபதி என்கிற கேகயராஜனிடம் வைச்வாநர வித்யாப்யாஸத்திற்காகப் போன உத்தாலகர் முதலான ஆறு ப்ராஹ்மணர்களைப் பார்த்து மஹா ப்ரம்மவித்தான கேகயராஜன், தன் ராஜ்யத்தில் பாபிகளில்லாததால் தனக்குப் பாப ஸம்பந்தமில்லையெனவும், ஆகையால் தன்னிடம் ப்ரதிக்ரஹம் செய்யலாம் எனவும் சொன்னதினால் ப்ரம்மவித்துகளும் பாபத்துக்குப் பயப்பட வேண்டுமென்று ஏற்பட்டது. உஷஸ்தி என்னும் மஹா ப்ரஹ்ம வித்தானவர், ப்ராணாபத்தான ஸமயத்தில் சண்டாளன் சமைத்த கொள்ளை வாங்கிக் கொஞ்சம் சாப்பிட, அவரைத் தாஹத்துக்குக் கொஞ்சம் தீர்த்த மருந்தும்படி அவன் கேட்டபொழுது அது சாஸ்த்ரத்தைக் கடந்ததாகும்; கொள்ளைச் சாப்பிட்டது ப்ராணனைத் தரித்துக்கொள்ள' வென்றும் சொன்னதால் ப்ரம்ம வித்துக்களும் சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேணுமென்று ஏற்படுகிறது. ஸ்ரீ கீதாசார்யன் 18-ம் அத்யாய ஆரம்பத்தில் கர்மங்களை விடும் விஷயத்தில் சிலருடைய அபிப்ராயத்தைச் சொல்லி, "யஜ்ஞதாந........." என்று இரண்டு ச்லோகங்களினால் கர்மங்களை விடக் கூடாதென்பதே தன்னுடைய நிச்சயமான உத்தம அபிப்ராயமென்றும் "நியதஸ்ய" என்கிற அடுத்த ச்லோகத்தினால் நித்யகர்மங்களை விட்டவனைத் தமோகுணம் சூழ்ந்தவனென்றும் தூஷித்தான். ஈசாவாஸ்யோபநிஷத்தில் "குர்வந்நேவேஹ" என்கிற வாக்யத்தினால் தேஹம் விடுமளவும் கர்மங்களை விடாமல் பண்ணியே தீர வேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. "க்ரியாவாநேஷ" என்று ப்ரஹ்ம வித்துக்களுக்குள் கர்மாநுஷ்டாநம் செய்பவனே மிகவும் உயர்ந்தவனென்று சொல்லப்பட்டது. கடவல்லி என்கிற உபநிஷத்தில் 'நாவிரதோ துஶ்சரிதாத்' (இந்த்ரியங்களை யடக்காமல் பாபம் செய்து கொண்டிருப்பவன் எவ்வளவு பக்திமானானாலும் ப்ரஹ்மத்தை யடையமாட்டான்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பது தான் ஆஸ்திக க்ருத்யமாகும்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

சில ஸம்சயங்கள்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ப்ரபவஸு கார்த்திகை மாஸத்திய வேதாந்ததீபிகையில் தேவனூர் விளாகம் ஸ்ரீ உபய லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி எழுதியிருக்கிற 'பகவானுடைய ஜகத்காரணத்வம்' என்று தலைப்பிடப்பட்ட வ்யாஸத்தில் மூன்று ஸம்சயங்கள் என்னைப் போன்ற சிலர்க்குத் தோன்றி இருக்கின்றன. இவைகளைப் பற்றிக் கீழே ஸங்க்ரஹமாக எழுதி இருக்கிறேன். இந்த ஸம்சயங்களை அந்த ஸ்வாமிக்குத் தெரிவித்து அவற்றைத் தீர்க்கத்தக்க உத்தரங்களை அடுத்த தீபிகையின் வாயிலாக எல்லோரும் அறியும்படி வெளியிட ப்ரார்த்திக்கிறேன். அவைகளாவன:—" ப்ரஹ்மண: ஸகல நிமித்தோபாதாநத்வம் என்பதற்கு நிமித்தஞ்ச உபாதாநஞ்ச நிமித்தோபாதாநே, ஸகலஸ்ய நிமித்தோபாதாநே ஸகல நிமித்தோபாதாநே, தயோர்பாவஸ்தத்வம்! அபின்ன கார்யத்தை அதாவது ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமுமாகை, ப்ரஹ்மத்தினிடமுள்ள ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமாயுமிருக்கும் தன்மை என்பது பொருள்" என்று அந்த ஸ்வாமி எழுதி இருக்கிறார். இதில் ஸகல நிமித்தோபாதாநத்வம் என்கிற ஸமஸ்த பதத்திற்கு விக்ரஹ வாக்யம் எழுதி இருப்பதும் சரியன்று; இதை விவரித்திருக்கிற வாக்யமும் ஸங்கதமாகத் தோன்றவில்லை. அபின்ந கார்யத்தை அதாவது ஒரே கார்யத்தைக் குறித்து, என்று சொல்வது சரியா என்று அந்த ஸ்வாமியே நன்கு பராமர்சிக்க வேண்டும். இங்கு அபிந்நபதம் காரண வஸ்து பரமே ஒழிய கார்ய பரமன்று. உலகத்தில் ஒரு கார்யத்தைக் குறித்து உபாதாந காரணமாயும் இருக்கிற வஸ்துக்கள் வெவ்வேறாகவே காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் நிதர்சநமாக ஒரு குடத்தையும் வஸ்த்ரத்தையும் எடுத்துக்கொள்வோம். குடத்துக்கு உபாதாந காரணம் மண், நிமித்த காரணம் குயவன். இவ்வண்ணமாகவே வஸ்த்ரத்திற்கு உபாதான காரணம் பஞ்சு, நிமித்தகாரணம் சேனியன் இவ்வாறாகவே எங்கும் கார்யங்களுக்கு உலகத்தில் உபாதாந காரணங்களாக இருக்கிற வஸ்துக்களும் நிமித்த காரணங்களாக இருக்கிற வஸ்துக்களும் வெவ்வேறாகவே காணப்படுவதால், உபாதாநத்வம் நிமித்தத்வம் என்கிற இரண்டு தர்மங்களும் சேர்ந்திராதவைகளாக, அதாவது வ்யதிகரணங்களாகவே எல்லோராலும் அநுபவிக்கப்படுகின்றன. வேதாந்த சாஸ்த்ரத்திலோ வென்றால் சிதசித்விசிஷ்டமான ப்ரஹ்மம் ஒன்றே ஜகத்ரூபமான கார்யத்தைக் குறித்து உபாதானமாயும் நிமித்தமாயுமிருப்பதால் மேற் கூறப்பட்டுள்ள உபாதாநத்வம் நிமித்தத்வம் இரண்டும் ப்ரஹ்மம் என்கிற ஒரு

வஸ்துவினிடம் சேர்ந்திருப்பவைகளாக, அதாவது ஸமாநாதிகரணங்களாக அறியப்படுகின்றன. ப்ரஹ்மத்திற்கு இதுதான் அபிந்ந நிமித்தோபாதாநத்வம். ஆகவே அபிந்ந என்கிற பதம் கார்யபரமல்ல. காரண வஸ்துவையே குறிக்கிறது. இந்த அர்த்தமே வேதாந்த ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய திருவுள்ளத்துக்கு ஸமஞ்ஜஸமானது. தத்வ ப்ரக்ரியை இப்படி இருக்க, இதற்கு விருத்தமாக அபிந்ந பதத்தைக் கார்யபரமாகச் சொன்ன ஸ்வாமியின் கருத்தை அபிஜ்ஞர்கள் அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். விக்ரஹவாக்யம் வருமாறு — நிமித்தஞ்ச உபாதாநஞ்ச நிமித்தோபாதாநே இதி விசேஷணோபய ஸமாஸ:; ஸகலஞ்ச தந்நிமித்தோபாதாநஞ்ச ஸகலநிமித்தோபாதாநம், விசேஷணம் விசேஷ்யேண பஹுளம் இதி; தஸ்ய பாவ: ஸகலநிமித்தோபாதாநத்வம்।

36-வது பக்கத்தில் "பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமாகச் சொன்னால் பாதகமில்லை. தவிர, யோக விபாகமானது ஏதாவது ஜ்ஞாபகமிருந்தால் தான் ஆச்ரயிக்கலாமாகையால் யோக விபாகாத் பஞ்சமீ சொல்வதைக் காட்டிலும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதுவும் அஸங்கதம். 'ஜநிகர்த்து: ப்ரக்ருதி:' என்கிற ஸூத்ரத்திலுள்ள ப்ரக்ருதி என்கிற பதம் ஹேதுமாத்ரபரம் என்பது வ்ருத்திகாரருடைய மதம். உபாதாந மாத்ர பரமென்பது பாஷ்யகையட மதம். இந்த இரண்டு அபிப்ராயங்களுக்கு இணங்கியே மூலத்தில் 'ப்ரஹ்மண: ப்ரஜா: ப்ரஜாயந்தே' என்று உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. (1) ப்ரஹ்மா, ஹிரண்யகர்ப்பன். அவர் ஸர்வ கார்யங்களையும் குறித்து உபாதாந காரணமல்ல. இது வ்ருத்திகாரருடைய அபிப்ராயம். (2) ப்ரஹ்ம பரப்ரஹ்மம். இது ஸர்வ கார்யங்களையும் குறித்து உபாதாந காரணம்; இது பாஷ்ய கையட மதம். ஸூத்ரார்த்த மென்னவென்றால், ஜநிகர்த்து: உத்பத்திக்கு ஆச்ரயமாக இருக்கிற வஸ்துவுக்கு, எது ப்ரக்ருதியோ அதாவது ஹேதுவோ, அது அபாதாநம் என்கிற பெயரை அடைகிறது. அபாதான ஸம்ஜ்ஞை வந்தவுடன் 'அபாதாநே பஞ்சமீ' என்கிற ஸூத்ரத்தினால் பஞ்சமீ விபக்தி வருகிறது என்பது தத்வம். ஆதலால் எழுதியிருக்கிறபடி பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமன்று. பஞ்சம்யந்த பதத்தினால் வாச்யமான அர்த்தத்திற்கு அபாதாந ஸம்ஜ்ஞை வரின் அதற்கு வாசகமாக இருக்கிற பதத்தைக் காட்டிலும் பஞ்சமீ வருகிறது. இப்படி இருக்க பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமென்பது பாணிநீய வ்யாகரண ப்ரக்ரியைக்கு இணங்காதது. வேறு எந்த வ்யாகரண ப்ரக்ரியையும் அபிஜ்ஞர்கள் இக்காலத்தில் ஒத்துக்கொள்ளார்கள்.

நிற்க, மேலும் 'யோகவிபாகமானது ஏதாவது ஜ்ஞாபகமிருந்தால்தான் ஆச்ரயிக்கலாம்' என்று எழுதி இருப்பதும் வையாகரண ஸம்ப்ரதாய விருத்தம். 'இஷ்டஸித்த்யர்த்தோ யோகவிபாக:' என்பதுதான் பாதஞ்ஜல பாஷ்ய ரஹஸ்யம். அதாவது சாப்திக ஸம்ப்ரதாயத்தில் எல்லோராலும் விப்ரதிபத்தியின்றி ஸம்ஹிதா பாடத்தினின்று தனித்தனியாக விபாகம் செய்யப்பட்டிருக்கிற ஸூத்ரங்களால் நிஷ்பந்நங்களான சப்தங்களைக் காட்டிலும் வேறுபட்டும் ஸம்ப்ரதிபந்நங்களாகவுமிருக்கிற

சில சப்தங்களுக்கு ஏற்கெனவே உள்ள ஸூத்ரங்களால் அநுசாஸநம் இல்லாமல் போகுமேயாகில், அப்படிப்பட்ட சப்தங்களுக்கு ஸாதுத்வ கல்பனைக்காக வேறு இல்லாமையால் ஸமர்த்த யோகவிபாகம் செய்து அதனால் அந்த சப்தங்களைப் பொது சப்த கோஷ்டியில் சேர்த்துக்கொள்வது வழக்கம். படக பாடகங்களில் அபியுக்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற சப்தங்களுக்கு எந்த விதத்திலாவது ஸாதுத்வத்தைக் கல்பிப்பது தான் வையாகரண சைலி. இஷ்ட ஸித்தியின் பொருட்டே யோகவிபாகமே ஒழிய தேவனார் விளாகம் ஸ்வாமியின் அபிப்ராயப்படி ‘ஏதாவது ஜ்ஞாபகமிருந்தால் தான் யோகவிபாகம் ஆச்ரயிக்கலாம்’ என்பது ஒருவராலும் ஒத்துக்கொள்ளத்தக்கதன்று.

ப்ரபவ-வ-ஸீ
17—12—1927

தட்டை வெ. ஸ்ரீநிவாஸதாஸன்

ஸ்ரீ:

புஸ்தக விமர்சம்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அநுக்ரஹித்துள்ள ஸ்தோத்ரங்கள்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள பகவத் ஸ்தோத்ரங்களை நாகர லிபியில், வெங்கடாத்ரி ஹரம் ஸ்ரீ. உப. பண்டித அநந்தாசார்ய ஸ்வாமி, ஒரு புஸ்தக ரூபமாக ப்ரசுரம் செய்திருக்கிறார். நாம் பார்த்த வரையில் அந்த ஸ்தோத்ரங்கள் சுத்தமான பாடங்களுடன் கூடியவைகளாக இருப்பதாகவே தெரியவருகிறது. சில வருஷங்களுக்கு முன், இம்மாதிரியாகவே, ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரங்களெல்லாம், நாகர லிபியிலேயே, ராயம்பேட்டை ஸ்ரீ. உப. பண்டித ஆர். வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் ப்ரசுரிக்கப்பட்டன. அந்தப் புஸ்தகம் இப்பொழுது துர்லபமாகி இருக்க வேண்டுமென்றே நாம் நினைக்கிறோம். ப்ரக்ருத புஸ்தகத்தின் க்ரயம் ரூ 1—0—0. இதை அபேக்ஷிப்பவர்கள், “34, முத்துநாயக வீதி, நுங்கம்பாக்கம், மதராஸ்'' என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ வை. ஸி. ஸபை வார்ஷிக மஹா ஸங்கம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அடுத்த வார்ஷிக மஹா ஸங்கத்தை கோயமுத்தூரில் நடத்தவேண்டுமென்று ஸ்ரீமான் ஸி. வி. வெங்கடரமண அய்யங்கார் ஸ்வாமி அழைத்ததன்பேரில் மஹா ஸங்கத்தை ஏப்ரல் மாஸம் (ஈஸ்டர் விடுமுறையில்) அங்கு நடத்துவதாக நிர்வாக ஸபையார் தீர்மானித்திருக்கின்றனர். ஆகவே மஹா ஸங்கம் கொயமுத்தூரில் “தர்ம விலாஸ''த்தில் நடைபெறும். காலம் முதலிய முற்ற விவரங்கள் பின்னால் தீபிகாபிமானிகளுக்கு அறிவிக்கப்படும்.

காரியதர்சி.
ஸ்ரீ. வை. ஸி. ஸபை.

ஸ்ரீ:

[illegible]

[illegible]

பத்ராதிபரின் குறிப்புகள்.

மஹாத்மா காந்தியும் வர்ண தர்மா நுஷ்டாதாக்களும்.

“[illegible]''. ஏற்கெனவே இரண்டொரு ஸமயங்களில் நாம் மஹாத்மா காந்தியின் உக்திகளையும் அபிப்ராயங்களையும் பற்றி ஸ்வல்ப நிர்வேதத்துடன் விமர்சிக்கும்படி ஸம்பவித்திருக்கின்றது. மறுபடியும் அவரைப் பற்றி அவ்விதமாகவே ப்ரஸ்தாவிக்கும்படி நேர்வதைக் குறித்து நாம் மிகவும் சோகிக்கிறோம். அவரிடம் அநேக ஸத்வ குணங்கள் மேவிட்டிருப்பதுடன், நமது சாஸ்த்ரங்களில் விச்வாஸமும் அந்தச் சாஸ்த்ர கர்த்தாக்களிடத்தில் மிக்க கௌரவ புத்தியும் அவருக்குப் பரிபூர்ணமாயிருக்கின்றன வென்று நாம் க்ரஹித்திருக்கிறபடியால், அந்த க்ரஹணத்திற்கு விருத்தமாயுள்ள சொற்கள் அவரிடமிருந்து வெளிவருகின்றன வென்பதை நாம் அறியும்பொழுது அவைகளைப் பற்றிப் பராமர்சிக்காமல் இருப்பது ஸாத்யமில்லை.

சென்ற மாஸத்தில் அவர், தமது பத்ரிகையில், வர்ண தர்மங்களைப் பற்றி ஒரு தத்வ விசாரம் செய்திருக்கிறார். அந்த விசாரத்தில், ஜநங்கள் எல்லாரும் வர்ண தர்மம் என்னும் ஒரு வ்யவஸ்தையைத் தமது ச்ரேயஸ்ஸை உத்தேசித்து அவச்யம் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், ஆனால் அந்த வ்யவஸ்தை பிறப்பைச் சார்ந்ததாக இல்லாமல் கேவலம் தொழில்களின் விபா

கத்தை மாத்ரம் சார்ந்ததாக இருத்தல் வேண்டுமென்றும், ஜநங்களுக்குள் வம்ச பரம்பரையாகத் தம் தமக்குக் கிடைத்திருக்கும் தொழில்களுக்கு எவ்வித கலக்கமும் நேராமல் இருப்பதே தேசத்திற்கு க்ஷேமகரமென்றும், ஆயினும் ஒருவன் தனது வர்ணத் தொழிலை த்யஜித்துவிட்டு மற்றொருவனுடைய வர்ணத் தொழிலைப் பரிக்ரஹித்தால் அதனால் அவனுக்கு எவ்வித பாபமும் நேராதென்றும், இன்னும் இவ்வாறு பல யுக்தி வாதங்களைச் செய்துவிட்டு, கடைசியாக நமது தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் க்ஷோபத்தை விசாரித்து வருகையில், நம் தேசத்தில் வர்ண தர்மங்களைப் பரிபாலித்து வரும் ஹிந்துக்களெல்லாரும் தாம் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களென்று எண்ணிக்கொண்டு அஹங்காரம் மதம் தர்ப்பம் முதலிய துஷ்ட மனோபாவங்களுக்குப் பரவசராகி மற்றவர்களை இகழ்ச்சியுடன் நடத்தி வருவதாலேயே இந்த க்ஷோபம் முழுவதும் ஜநித்திருக்கின்றதென்றும், பிறப்பினால் ஏற்படும் வர்ண வ்யத்யாஸத்தையும் அது ஸம்பந்தமாக வரும் அஸ்ப்ருச்யத்வம் முதலிய ஜாதி நியமங்களையும் நாம் பரித்யஜித்தால் இப்பொழுது காணப்படும் க்ஷோபம் நிவ்ருத்தமாகி நமக்குள் ஸௌஹார்த்தம் மறுபடியும் ஸ்தாபிதமாகி விடுமென்றும் அவர் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். இந்த விசாரத்தில் முதலிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றி நாம் இப்பொழுது விமர்சிக்க அவகாசமில்லை; வர்ண தர்மங்களை அநுஷ்டிப்பவர்களின் மீது அவர் கூறியிருக்கும் தூஷணத்தைப் பற்றி மாத்ரம் விசாரிக்கப் புகுகின்றோம்.

முதலில், நமது வர்ண தர்மாநுஷ்டாதாக்கள், பிறப்பினால் வர்ண வ்யத்யாஸம் ஏற்படுகின்றது என்று சாஸ்த்ரம் சொல்வதை நம்பிக்கொண்டு ஒவ்வொருவரும் தம்தம் வர்ணத்திற்குத் தக்கபடி சிற்சில நியமங்களை அநுஷ்டித்து வருவதை, த்வேஷ ஜநகமான நடத்தையென்று சொல்வது மிகவும் அஸங்கதம். லோகத்தில் ஒரு மநுஷ்யன் தனது வரம்புக்கு உட்பட்டு நடக்காமல் அதைக் கடந்து மற்றவர்களுடைய எல்லைக்குள் ப்ரவேசித்தால், அப்பொழுது அவர்களுக்குள் பரஸ்பரம் த்வேஷம் உண்டாவதையும் கலஹம் ஸம்பவிப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். அப்படி வரம்பை மீறி நடப்பதற்குப் பதிலாக, ஒருவன் ஸ்வத: ப்ராப்தமான நியமங்களைக் காட்டிலும் அதிகமான நியமங்களை ஏற்படுத்திக்கொண்டு, தனது ஸ்வாதந்த்ர்யத்தின் எல்லையைக் குறுக்கிக்கொள்ளும் பக்ஷத்தில், அப்பொழுதும் த்வேஷம் உண்டாகின்றது என்பதை நாம் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. ந்யாயத்திற்கு விருத்தமான ஆக்ரமணமே த்வேஷத்தை ஜநிப்பிக்குமே தவிர, ஸங்கோசம் ஒருகாலும் த்வேஷத்தை ஜநிப்பிக்கமாட்டாது. தவிரவும், த்வேஷம் என்பது ஜந்மாந்தர

வாஸநாநுகுணமாக ஸம்பவிக்கும் ரஜஸ் தமோ குணங்களின் உந்மேஷத்தைச் சார்ந்தது; கேவலம் பாஹ்ய வ்யாபாரம் அதற்கு ஒரு வ்யாஜம் மாத்ரமே ஆகக்கூடும். ஜகத்திற்கு மஹத்தான க்ஷோபத்தை உண்டு பண்ணும் 'பால்ஷேவிஸ்ட்' என்னும் துஷ்டர்கள் வஸிக்கும் இடத்தில் ஜநங்களுக்குள் காணப்படும் த்வேஷம் முதலானவை எந்த ஜாதி நியமங்களால் ஏற்பட்டிருக்கின்றன? அநேக இடங்களில், வெவ்வேறு நியமங்களைத் தவறாது அநுஷ்டித்து வரும் வெவ்வேறு ஜாதியர்கள் பரமமான ஸௌஹார்த்தத்துடன் வர்த்தித்து வருவதை நாம் பார்க்கவில்லையா? ஆகையால், ஜந்மாந்தர வாஸநா வசத்தால் பெருத்த கலக்கத்தை அடையும் சித்த வ்ருத்தியே த்வேஷாதிகளுக்குக் காரணமாகின்றது என்று சொல்ல வேண்டுமே தவிர, ஜாதி நியமங்களையும் இன்னும் அவை போன்ற மற்றை விஷயங்களையும் அவைகளுக்குக் காரணமென்று சொல்வது யுக்தி ஸஹமாக மாட்டாது.

இரண்டாவது, வர்ண தர்மாநுஷ்டாநத்தை ஆதரிக்குமவர்கள், அஹங்காரம் மதம் முதலிய தோஷங்களால் க்ரஸ்தர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வதும் சரியன்று. வர்ண தர்மங்களைச் சரிவரப் பரிபாலநம் செய்து வருபவர்கள், பெரும்பாலும், ஸமஸ்தமான ஸாத்விக ஜநங்களுக்கும் ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடிய சுத்தமான சித்த வ்ருத்தியுடன் வர்த்தித்து வருகிறார்கள் என்பதை நாம் உறுதியாகச் சொல்வோம். அவர்கள், அஸ்ப்ருச்யத்வம் முதலிய நியமங்களை அநுஷ்டித்து வந்தால், அந்த அநுஷ்டாநம் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்னும் சாஸ்த்ர விச்வாஸத்தினால் ஏற்படுகின்றதே தவிர, மற்றை எவ்வித ஆத்மோத்கர்ஷத்வ புத்தியாலுமன்று. 'தாமே உயர்ந்தவர், மற்றவர்களெல்லாரும் கீழ்ப்பட்டவர்கள்' என்னும் அஸத் புத்தியை உடையவர் எங்கேயாவது தென்படும் பக்ஷத்தில், அவர்களைச் சாஸ்த்ர வச்யர்களல்லரென்றும், அவர்கள் ருஜுவான தர்மாநுஷ்டாதாக்களாகாரென்றும் நாம் சொல்ல ஸந்நத்தராக இருக்கிறோம். விசித்ரமான ஜகத் ஸ்ருஷ்டியில் அப்படிப்பட்ட வ்யக்திகள் இருப்பது அஸம்பாவிதமன்று. ஆனால் அப்படிப்பட்ட வ்யக்திகளைப் பார்த்துவிட்டு ஜாதி முழுவதும் தோஷ துஷ்டம் என்று சொல்வது ந்யாய்யமாகாது.

இதுதான் தத்வம். மஹாத்மா, ஏதோ ஒரு அபிநிவேசத்தால் ஆக்ரமிக்கப்பட்டவராய்க் கொண்டு, இந்தத் தத்வத்தை கண்ணுற்றுப் பாராமல், நிந்தைக்கு அநர்ஹர்களாக இருக்கும் ஸாதுக்களை நிந்தித்திருக்கிறார் என்றே நாம் நினைக்கிறோம். ஆனால், அவர் சொல்லியிருக்கும் வார்த்தையில் நமக்கு அநிஷ்டமான அம்சம் ஒன்றுமில்லை. அஹங்காரம் கூடாதென்றும் பூத

ஸௌஹார்த்தம் வெண்டுமென்றும் சொல்வதில் நமக்கு ஸம்மதமும் உபாதேயமே. “ஹரஷோ த்ரவதி, த்ரவோ யஉஏதி ஸ்ராஏதி” என்று சாந்தி முதலிய நற்குணங்களால் கூட ஒருவனும் அஹங்காரத்தை அடையக் கூடாதென்று நமது சாஸ்த்ரம் முறையிடுகின்றதன்றோ? ஸ்ரீ சரண்யனுடைய் த்யாநத்திற்கும் அப்மாதிரியான காலுஷ்யம் அத்யந்தம் விருத்தம். ஆகையால், அந்தத் தோஷங்களை அநுஸந்தநம் செய்யவும் அந்த அநுஸந்தாநத்தால் அவ்வகளைத் தூரத்தில் பரித்யஜிக்கவும் ஒரு அவகாசத்தை நமக்குக் கொடுத்த இந்த மஹாத்மாவினிடம் உபகார ஸ்ம்ருதியையே நாம் செய்கின்றோம்.

***   ***   ***

நமது ஸபையின் பண்டித உபந்யாஸங்கள்.

நமது ஆஸ்திக ப்ரபுக்களுள் ஒருவரான கோயம்புத்தூர் ஸ்ரீமாந் ஸி. வி. வெங்கடரமண ஐயங்காருடைய உதாரமான உபகாரத்தால், சேலம் கோயம்பத்தூர் ஜில்லாக்களில் இரண்டொரு மாஸகாலமாக நமது தர்ம ஸம்பத்தமாகவும் ஸித்தாந்த ஸம்பத்தமாகவும் அநேக உபந்யாஸங்கள் நடைபெற்று வருகின்றனவென்பது நமது அபிமாநிகளெல்லாருக்கும் தெரிந்த விஷயம். புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அந்த உபந்யாஸங்களை நடத்திவருகிறார். இதுவரையில் சற்றேறக்குறைய 40 உபந்யாஸங்கள் நடந்திருக்கின்றனவென்று நாம் அறிகிறோம். உபந்யாஸங்கள், எல்லாருக்கும் ஆநந்த கரமாகவும் உபகாரகமாகவும் இருக்கின்றன வென்று கோயம்புத்தூரில் இருக்கும் நமது ஸஹ்ருத்துக்கள் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த உபந்யாஸங்களுட் சிலவற்றின் ஸங்க்ரஹம், அவர்களால் எழுதப் பெற்று, இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. மஹாந்களாயுள்ள விவேகிகளுக்கும் தர்ம விஷயங்களில் உத்போதகங்கள் அதிமாத்ரம் உபகாரகங்களாகையாலும், ஸ்ரீ சரண்யனுடைய குணங்களைப் பற்றியும் சேஷ்டிதங்களைப் பற்றியும் பேசுவது அவனது பக்தர்களெல்லாருக்கும் போக்யமாயும் பக்தி வர்த்தகமாயும் இருக்கிறபடியாலும், இம்மாதிரியான உபந்யாஸங்கள் ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு அடிக்கடி அவச்யம் அபேக்ஷிதங்கள். ஸ்ரீமாந் வெங்கடரமண ஐயங்காரைப் போல இதர ஆஸ்திக ப்ரபுக்களும் இம்மாதிரி உபந்யாஸங்களை வேறு இடங்களிலும் நடத்தி வைப்பார்களென்றும், ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியைப் போல் இதர பண்டிதர்களும் முன் வந்து தமது வைதுஷ்யத்தால் உபகரிப்பார்களென்றும் நாம் நம்புகிறோம்.

***   ***   ***

டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளின் ஹிந்துமத விவாஹச் சீர்திருத்தம்.

ஹிந்து மதத்தை அவலம்பித்திருக்கும் நாம், நமது கந்யகைகளுக்கு அதிபால்யத்தில் விவாஹத்தைச் செய்விக்கிறோம் என்றும், அப்படிச் செய்விப்பது அந்தக் கந்யகைகளுக்கும் அவர்களிடம் ஜநிக்கும் ப்ரஜைகளுக்கும் மஹத்தான அநாரோக்யத்தையும் தார்ட்யக் குறைவையும் விளைவிக்கின்றதென்றும் எண்ணி, அம்மாதிரி விவாஹம் செய்விப்பதைத் தடுக்கும் பொருட்டு, ராஜாங்கத்தாரைக் கொண்டு அது விஷயமாக ஒரு சட்டம் ஏற்படுத்துவதற்காக, டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் என்னும் இங்கிலீஷ் நாகரிகம் பெற்றிருக்கும் ஒருவர், சென்னை சட்டநிர்மாண ஸபையின் பர்யாலோசனைக்கு ஒரு வ்யவஸ்தையை விஜ்ஞாபநம் செய்துகொண்டிருக்கிறார். அதன் முக்யமான அம்சம் என்னவென்றால்: பதினான்கு வயஸ்ஸுக்குக் குறைந்த கந்யகைகளுக்கு விவாஹம் செய்யக்கூடாது என்பதே. இப்படி ஒரு விதாநம் செய்வது மிகவும் அநாவச்யம்; பல காரணங்களால் ப்ரபலமான ஆக்ஷேபத்திற்கும் அர்ஹமாகின்றது. முதலில், நம்மால் ‘விவாஹம்’ என்று வ்யவஹரிக்கப்படும் ஸம்ஸ்காரத்திற்கும் ப்ரஜைகளின் அநாரோக்யத்திற்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லை. லௌகிக வ்யவஹாரப்படி தம்பதிகள் பதிபத்நிகளாகச் சேர்ந்து வஸிப்பதற்கு இந்த ஸம்ஸ்காரம் காரணமாகமாட்டாது. அதற்கு அர்ஹதை வருவதற்குச் சாஸ்த்ரங்கள், மற்றும் ஒரு ஸம்ஸ்காரத்தை விதிக்கின்றன. அது, தம்பதிகளுக்குச் சரியான வயது வந்த பிறகே செய்யப்படுகின்றது. ‘விவாஹம்’ எனப்படும் ஸம்ஸ்காரமோ, த்ரிகால ஜ்ஞாநிகளான நமது ஸ்ம்ருதி கர்த்தாக்களால், அத்ருஷ்ட பல ஸாதகங்களான சில தர்மாநுஷ்டாநங்களைச் செய்வதற்கு ஒருவித ஸ்வரூப யோக்யதையைப் பெறும் பொருட்டு மாத்ரம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் தத்வத்தை அறிந்து கொள்ளாமலே இந்த அம்மாள் ப்ரமித்து ப்ராக்ருத வ்யவஸ்தையை ஏற்படுத்த ப்ரயத்நப்படுகின்றாரென்றே நாம் நினைக்கிறோம். மேலும், நம்மால் இப்பொழுது அநுஷ்டிக்கப்பட்டு வரும் வ்யவஸ்தை பகவதாஜ்ஞாரூபமாகப் பூர்வ காலத்தில் மஹர்ஷிகளாலும் அதற்குப் பிறகு நமது ஆசார்யர் முதலானவர்களாலும் மிகுந்த பயபக்தியுடனும் விச்வாஸத்துடனும் தவறாது பஹு காலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இப்படி எவ்வித தோஷத்திற்கும் ஆஸ்பதமில்லாமலும் அநாதி காலமாக நமது பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதுமான இந்த வ்யவஸ்தையை, அஜ்ஞாநத்தால் ஜநித்துள்ள ப்ரமத்தைக் காரணமாகக்கொண்டு மாற்ற முயலும் இந்த அம்மாளுடைய ப்ரயத்நம்லோக ஹிதத்தை இச்சிக்கும் அபிஜ்ஞர்களெல்லாராலும் ஸர்வதா அநா

தரிக்கத் தகுந்ததே. இதைப் பற்றிய மற்றை அம்சங்களை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

*** *** ***

வர்ணாச்ரம தர்ம மஹா ஸங்கம்.

சென்ற இரண்டொரு மாஸ காலமாகச் சென்னை திருவல்லிக்கேணியில் நமது மத ஸம்பந்தமாகச் சிறந்த உபந்யாஸங்களைச் செய்து வரும் ஸ்ரீமாந் யு. பி. க்ருஷ்ணமாசார்யருடைய ப்ரயத்நத்தின் பேரில், சென்னையிலுள்ள சில ஆஸ்திக ப்ரபுக்கள் ஒன்று சேர்ந்து, நிகழும் மார்கழிமீ 14, 15உ களில் வர்ணாச்ரம தர்ம மஹா ஸங்கமொன்றை ஸ்ரீ பார்த்தஸாரதியின் அநுக்ரஹத்தை முன்னிட்டு அவனுடைய திருவடி வாரமாகிற திருவல்லிக்கேணியில் நடத்தி வைத்தார்கள். ம-ள-ள-ஸ்ரீ ராவ் பஹதூர் வி. ரங்காநதம் செட்டியார் ஸ்வாகத ஸபையின் அத்யக்ஷராகவும், ஸ்ரீ. உப கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் மஹா ஸங்கத்தின் அக்ராஸநாதிபதியாகவும், பலவிடங்களிலிருந்து அநந்ய ப்ரயோஜநமாக வந்திருந்த பல பண்டித ரத்நங்கள் உபந்யாஸம் செய்பவர்களாகவும், இம்மாதிரி மிக்க சிறப்புடன் அந்த ஸங்கம் நடைபெற்றது என்று நாம் அறிகிறோம். இது நமக்கு மிகவும் ஆச்வாஸகரமாக இருக்கின்றது. தர்மத்தைப் பற்றிப் பேசுவதையே மிகவும் லஜ்ஜாகரமென்று நினைக்கும் ஜநங்களால் நிறைந்துள்ள இக்காலத்தில், அப்ரத்யக்ஷங்களாக சில விஷயங்களுண்டென்றும், அவைகளுள் ச்ரேயஸ்கரமென்று நமது மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டிருப்பவைகளை ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் சில ஜநங்களாவது ஒருவிதமான ச்ரத்தையுடன் ப்ரவ்ருத்திக்கத் துணிகிறார்கள் என்பதைப் பார்ப்பது ஸ்வல்பமான ஆச்வாஸத்தையாவது ஜநிப்பிக்குமன்றோ ? உண்மையாகவே,

ஸம்ஷுரஸ்யா ஶ்ரத்தயா யுக்த ஸக்கொஸவி யஸதெ யதி ।
ஸநாதநஸ்ய யஜஷஸ்ய ஜீவிதாஸா ததா ஹவெத ॥

என்பது நமது நம்பிக்கை. பீஜபூதமான இந்த ச்ரத்தையைத் தமது புருஷப்ரயத்நத்தால் பாதுகாத்து அதை நாசமடைய வொட்டாமல் ஸம்ரக்ஷிக்க முயன்று வரும் ஸ்ரீமாந் யு பி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி போன்ற மஹான்களுடைய பரிச்ரமத்தை ஸ்ரீ சரண்யன் தனது க்ருபையால் ஸபலமாகச் செய்யவேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

விகார ப்ரஹ்மணஶ । ஸதஸ்விஸுவவாதெ ஸஸ்ய ஜமத: ஸத்ரவ உபாதாதா ப்ரதிபாதிதா ஹவதி । ஸத்யெவ உபாதாநகாரணஸ்ய ஸஸ்ய நிமித்தாபிஷாநபெக்ஷாபஸ்ரவெபி, ஸவஜ் விலக்ஷண ஸாமாஸஸ்ய ஸவஜ்ஜஸ்ய ப்ரஹ்மண: ஸவஶக்தியோகோ ந விருத்த இதி அவிதீய

பல விதங்களான பெயர் ரூபம் இன்றிக்கே இருந்தது என்பது "ஸதேவ" என்பதால் ஏற்படுகிறது. இப்படி அர்த்தம் ப்ரதிபாதிதமாகி விட்டால், 'இந்த ஜகத் முழுமைக்கும் அந்த ஸத்தே உபாதாந காரணம்' என்பது விளக்கினதாக ஆகிவிடுகின்றது. 'அவிதீயம்' என்னும் சப்தம், 'இந்த ஜகத்துக்கு அந்த ஸத்தைத் தவிர்த்து வேறு நிமித்த காரணம் இல்லை' என்பதைச் சொல்லுகின்றது. லோகத்தில் காணப்படும் கார்யங்களுக்கு உபாதாந காரணம் ஒன்றாகவும் நிமித்தகாரணம் மற்றொன்றாகவும் தென்பட்ட போதிலும், ஸத் என்னும் ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மம், மற்றை எல்லா வஸ்துக்களைக் காட்டிலும், விலக்ஷணமான தர்மியாக இருக்கிறபடியால், விலக்ஷணமான தர்மமாகிற ஸர்வசக்தியின் சேர்க்கையும் அதற்கு விருத்தமாக மாட்டா

ஸதஸ்விஸுவவாதெ—ஒரே வஸ்துவே பூர்வத்தில் அவிபக்தங்களான நாம ரூபங்களை உடைத்தாயிருக்கின்றதென்றும், பிறகு விபக்தங்களான நாம ரூபங்களை உடைத்தாயிருக்கின்றதென்றும் உபபாதிக்கப்பட்டால்.

உபாதாநதா—உபாதாந காரணமாக இருக்கும் தன்மையானது. ஒரு வஸ்துவுக்குப் புதிய அவஸ்தை ஒன்று ஸம்பவிக்கப்போகின்றது என்றிருக்கையில், அந்த வஸ்துவுக்கு இருக்கும் பழைய அவஸ்தையின் சேர்க்கையே உபாதாந காரணமாக இருக்கும் தன்மையாகும். மண்ணுக்குப் பிண்டமாகிற அவஸ்தை பூர்வாவஸ்தை; குடம் மடக்கான அவஸ்தைகள் உத்தராவஸ்தைகள்; ஆகையால் குடம் மடக்கு முதலியவைகளைக் குறித்து மண் உபாதாந காரணம். "ஹாவஷவஸ்ரா விஶெஷவத: ப்ராஹவஸ்ரா யொகம உபாதாநகவம்",

ஸவஜ் விலக்ஷணஸாக—குடத்திற்கு மண் உபாதாந காரணமாகவும் குயவன் நிமித்தகாரணமாகவும் இருப்பது போல, ஜகத்துக்கும் உபாதாநகாரணம் ஒன்றாகவும் நிமித்தகாரணம் மற்றொன்றாகவும் இருக்க வேண்டாவோ? என்னில், வேண்டுவதில்லை என்று உத்தரம் சொல்லுகிறார். ஜகத்காரணமாக இருக்கும் ப்ரஹ்மம், லோகத்தில் தென்படும் வஸ்துக்களெல்லாவற்றையும் காட்டிலும் விலக்ஷணமாக இருப்பதால், அதன் தர்மமும் விலக்ஷணமாக இருக்கக்கூடும்; அதற்கு ஸர்வவிதமான சக்தியும் உபபந்நமே. ஆகையால், அதுவே தன்னுடைய ஸர்வசக்தியைக் கொண்டு உபாதாந காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கக்கூடுமன்றோ? "விலக்ஷணபதிஷவா விலக்ஷணயொகம உபபந்ந:",

அதிஷ்டாத்ரந்தரம் வாரயதி | ஸர்வசக்தியோகாதேவ ப்ரஹ்மண: காஶ்சந ச்ருதய: ப்ரஹ்மோபாதாநகாரணத்வம் ப்ரதிபாத்ய நிமித்த காரணமபி ததேவேதி ப்ரதிபாதயந்தி, யதேயம் ச்ருதி: |

தன்றே? அப்படி ப்ரஹ்மத்திற்கு ஸர்வசக்தியின் சேர்க்கை இருக்கிறபடியாலேயே, சில ச்ருதிகள் அந்த ப்ரஹ்மம் உபாதான காரணம் என்பதை முதலில் ப்ரதிபாதித்துவிட்டு, பிறகு அதுவே நிமித்தகாரணமாகவும் இருக்கின்றது என்பதை ப்ரதிபாதிக்கின்றன. இந்த ச்ருதி அவைகளுள் ஒன்று. மற்றும் சில ச்ருதிகள், ப்ரஹ்மம் நிமித்தகாரணம் என்பதை ஒத்துக்கொண்டு, 'அதற்கே உபாதான காரணத்வம் எப்படி ஸங்கதமாகும்?'

அதிஷ்டாத்ரந்தரம்—மற்றொரு நிமித்த காரணத்தை. "அத்விதீயம்" என்பதற்கு 'இரண்டாவது இல்லாதது' என்பது பொருள். அதாவது, வேறொரு நிமித்த காரணம் இல்லை என்று அர்த்தம்.

ஸர்வசக்தியோகாதேவ— இவ்விடத்தில் வேறொரு சங்கை செய்து கொண்டு அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறார்:- ப்ரஹ்மம் என்பது சேதந வஸ்துவானதால், அது ஒரு கார்யத்திற்குக் காரணம் என்று சொல்லும் இடத்தில், முதலில் அதன் நிமித்த காரணத்வத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு உபாதாந காரணத்வத்தைச் சொல்வதன்றோ யுக்தமாகும்? இவ்விடத்தில் முதலில் உபாதாந காரணத்வத்தையும் பிறகு நிமித்த காரணத்வத்தையும் இந்த ச்ருதி வாக்யம் சொல்லுகின்றது என்று சொன்னால், அது அயுக்தமாகின்றதாதலால் அந்த அர்த்தம் இந்த ச்ருதியின் அர்த்தமாகமாட்டாது என்பது தான் இவ்விடத்திற் செய்யப்படும் சங்கை.

இதற்கு ஸமாதாநம் என்னவென்றால்—ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரணம் என்பதை முதலில் ப்ரஸ்தாவிப்பதில் எவ்வித தோஷமுமில்லை என்பதே. ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ச்ருதி வாக்யங்களைப் பரிசீலநம் செய்து பார்த்தால், அவை ஜகத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறவைகளென்றும் ப்ரஹ்மத்தைக்கொண்டே ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறவைகளென்றும் இரு வகைப்படுகின்றனவென்பது ஏற்படும். இவைகளுள் முதல் வகையைச் சேர்ந்தவை, ப்ரஹ்மத்தின் உபாதாந காரணத் தன்மையை முதலில் ப்ரஸ்தாவித்து, பிறகு நிமித்த காரணத் தன்மையைப் பற்றிப் பேசும்; இரண்டாவது வகையைச் சேர்ந்தவை, முதலில் நிமித்த காரணத் தன்மையைச் சொல்லி பிறகு உபாதாந காரணத் தன்மையை விளக்கும். "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யாதியான ஸத்வித்யா வாக்யம் இரண்டாவது வகையைச் சேர்ந்தது; "கிம் ஸ்வித் வநம்" இத்யாதியாக மேல் உதாஹரிக்கப்படும் வாக்யம் முதல் வகையைச் சேர்ந்தது. இப்படி இரண்டு விதமாகவும் ச்ருதி வாக்யங்கள் காணப்படுகிறபடியால்

அந்யாஶ்ச ச்ருதயோ ப்ரஹ்மணோ நிமித்தகாரணத்வமுக்த்வா, அஸ்யைவ உபாதாநதாமபி கதமிதி பரிசோத்ய, ஸர்வசக்தியோகாத் உபாதாநகாரணம் ததிதராசேஷோபகரணம் ச ப்ரஹ்மைவேதி பரிஹரந்தி | "கிம் ஸ்வித் வநம் க உ ஸ வ்ருக்ஷ ஆஸீத்யதோ த்யாவா ப்ருதிவீ நிஷ்டதக்ஷு: | மநீஷிணோ மநஸா ப்ருச்சதேது தத்யதத்யதிஷ்டத் புவநாநி தாரயந் | ப்ரஹ்ம வநம் ப்ரஹ்ம ஸ வ்ருக்ஷ ஆஸீத்யதோ த்யாவா ப்ருதிவீ நிஷ்டதக்ஷு: | மநீஷிணோ மநஸா விப்ரவீமி வோ ப்ரஹ்மாத்யதிஷ்டத் புவநாநி தாரயந்" இதி ஸாமாந்யதோ த்ருஷ்டேந விரோதமாசங்க்ய ப்ரஹ்மண: ஸர்வவிலக்ஷணத்வேந பரிஹார உக்த: | அத:, "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இத்யத்ராபி 'அக்ரே' இத்யாதிநைக

என்பதைச் சங்கித்து, 'ஸர்வ சக்தியுடன் கூடிக்கொண்டிருக்கிறபடியால் உபாதாந காரணமாகவும் மற்றை வேறு ஸகல உபகரணமாகவும் அதுவே இருக்கக்கூடும்' என்று அந்தச் சங்கையைப் பரிஹரிக்கின்றன. "கிம் ஸ்வித் வநம்" இத்யாதியான ச்ருதி வாக்யம் இவைகளுக்கு உதாஹரணம். ஸாமாந்யமாகக் காணப்படும் விரோதத்தைச் சங்கித்துக்கொண்டு, ப்ரஹ்மம் மற்றை எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணமாக இருக்கிறபடியால், அது விரோதமாகமாட்டாது' என்று, இந்த ச்ருதி வாக்யங்கள் அந்தச் சங்கையைப் பரிஹரிக்கின்றன. ஆகையால், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்னும் வாக்யத்திற்குக் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதே உபபந்நமான அர்த்தம். "அக்ரே" என்பது முதலான அநேக சப்தங்கள், ப்ரஹ்மத்திற்கு அநேக விசேஷங்களை ப்ரதிபாதித்துக் கொண்டு

ப்ரக்ருத ச்ருதிக்குக் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அர்த்தத்தை அநுபபந்நமென்று சொல்வது யுக்தமாகமாட்டாது.

"கிம் ஸ்வித் வநம்" இத்யாதி ச்ருதி வாக்யங்களின் பொருள் என்னவென்றால்: "ஹே மநீஷிகளே! த்யாவா ப்ருதிவீ அடங்கியுள்ள இந்த ப்ரபஞ்சமாகிற கட்டிடத்தை எந்த மரத்தைக்கொண்டு ஈச்வரன் நிர்மாணம் செய்தான்? எந்தக் காட்டிலிருந்து அந்த மரம் கொண்டு வரப்பட்டது? இந்த லோகங்களெல்லாவற்றையும் தரித்துக் கொண்டு அவன் அவைகளுக்கு அதிஷ்டாதாவாக இருக்கிறானன்றோ?' இவ்விதமாகவா நீங்கள் ப்ரச்நம் செய்கிறீர்கள்? 'இந்த ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கு ப்ரஹ்மமே மரம். ப்ரஹ்மமென்கிற காடே அந்த மரத்திற்கு ஆதாரம். இம்மாதிரியே புவநங்களைத் தரித்துக்கொண்டு அந்த ஈச்வரன் அவைகளை அதிஷ்டித்து வருகிறான்', என்று நான் உங்களுக்கு ப்ரத்யுத்தரம் சொல்லுகிறேன்."

விசேஷா ப்ரஹ்மண: ப்ரதிபாதிதா: । அனபிஹித விசேஷ நிஷேதவார்த்தா கோட்யபி சப்தைர் ந த்ருச்யதே ; ப்ரத்யுத ஜகத்ப்ரஹ்மணோ: கார்யகாரணபாவஜ்ஞாபநாய, 'அக்ரே' இதி காலவிசேஷ ஸத்பாவ:, 'ஆஸீத்' இதி க்ரியாவிசேஷ:, ஜகதுபாதாநதா ஜகந்நிமித்ததா ச, நிமித்தோபாதானயோ ரைக்யேந ததேவ ப்ரஹ்மண ஸர்வசக்தியோகச்ச இத்யாத்யநந்தா: ஸஹஸ்ரசோ விசேஷா: ஸர்வ ப்ரதிபாதிதா: ।

காணப்படுகின்றன. 'ஸர்வ சப்தங்களும் விசேஷங்களை நிஷேதிக்கின்றன' என்று நீங்கள் சொல்வது போல ஒரு சப்தம்கூட காணப்படவில்லை; ப்ரத்யுத, 'ப்ரஹ்மம் என்பது காரணம் ஜகத் அதன் கார்யம்' என்பதை ஜ்ஞாபிக்கும் பொருட்டு கால விசேஷத்தைக் குறிக்கும் "அக்ரே" (முதலில்) என்னும் சப்தமும், க்ரியா விசேஷத்தைக் குறிக்கும் "ஆஸீத்" (இருந்தது) என்னும் சப்தமும் காணப்படுவதுடன், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கும் தன்மையும், அப்படி ஒரே ப்ரஹ்மமே நிமித்த காரணமாகவும் உபாதான காரணமாகவும் இருக்கின்றது என்பதைக் காண்பிப்பதால் ஏற்படும் ப்ரஹ்மத்தினுடைய ஸர்வ சக்தித்வமும், இன்னும் அறியப்படாமல் இருக்கும் இவை போன்ற ஆயிரக் கணக்கான மற்றை விசேஷங்களும் இந்த ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்தில் 'வ்ருக்ஷ:' (மரம்) என்பது உபாதான காரணத்தைக் குறிக்கின்றது. 'எப்படி மரத்தைக்கொண்டு ஜநங்கள் வீட்டைக் கட்டுகிறார்களோ, அப்படி எந்த மரத்தை (அதாவது—உபாதான காரணத்தை)க்கொண்டு ப்ரஹ்மம் ஜகத்தைச் செய்தது?' என்பது ப்ரச்நம். அப்படி உபாதான காரணமாக இருக்கும் வ்ருக்ஷத்திற்கு ஆதாரமாக இருப்பது 'வநம்' (காடு); இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டியில் அந்த ஆதாரம் எது? என்பதும் ப்ரச்நம். இவையெல்லாம் ப்ரஹ்மமே என்பது ப்ரத்யுத்தரம். 'த்யாவாப்ருதிவீ' என்பது ஜகத் முழுவதையும் குறிக்கின்றது. 'நிஷ்டதக்ஷு:' என்பதற்கு 'நிர்மாணம் செய்தான்' என்பது பொருள். ஒருமையாக ப்ரயோகம் செய்யாமல் பன்மையாகச் செய்திருப்பது வேதத்தின் ஸ்வாதந்த்ர்யம் இந்த ஜகத் ஸ்ருஷ்டியில், அதிகரணம், உபாதானம், அவைகளைத் தவிர்த்த மற்றை ஸகலமான காரக வர்க்கம் எல்லாம் ப்ரஹ்மமே என்று சொன்னதாயிற்று.

யதோ வாஸ்தவகார்யகாரணபாவாதிஜ்ஞாபநே ப்ரவ்ருத்தமிதம்,

யத:..........யோஜ்ய:—இந்த ஸத் வித்யா ப்ரகரணமானது, ஜகத்துக்கும்

யதோ வாஸ்தவ கார்யகாரண பாவாதி ஜ்ஞாபநே—ஸத்வித்யா ப்ரகரணத்தில், ச்ருதி, "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (பரமார்த்தமாக இருக்கும் இதுவே முன்காலத்தில் ஒன்றாகவே இருந்தது) என்று சொல்லிவிட்டு, அடுத்த வாக்யத்தில் பின் வருமாறு வேறொரு மதத்தை ப்ரஸ்தாவித்து அதை ப்ரதிக்ஷேபிக்கின்றது. ததைக ஆஹு: "அஸதேவேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் தஸ்மாதஸத: ஸஜ்ஜாயத" । "குதஸ்து கலு ஸோம்யைவம் ஸ்யாத்?" இதி ஹோவாச; "கதமஸத: ஸஜ்ஜாயேத?" । ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் । 'முன் காலத்தில் இது அஸத்தாகவே இருந்தது; அதிலிருந்தே ஸத் உண்டாயிற்று' என்று சிலர் சொல்லுகிறார்கள். அது எப்படி உபபந்நமாகும்? அபாரமார்த்திகமான த்ரவ்யத்திலிருந்து பாரமார்த்திகமான த்ரவ்யம் எப்படி உண்டாகும்? என்பது இதன் பொருள். இந்த வாக்யங்களுக்கு இதற்குமுன் வ்யாக்யாநம் செய்யப்படவில்லையாதலால், இவ்விடத்தில், ஸ்ரீபாஷ்யகாரர் அவைகளுக்கு வ்யாக்யாநம் செய்யவேண்டுமென்று திருவுள்ளம் பற்றி வ்யாக்யாநம் செய்கிறார்.

இவ்விடத்திற் செய்யப்படும் உபபாதநத்தை நன்றாக அறிவதன் பொருட்டு, அந்த உபபாதந ஸம்பந்தங்களான சில அம்சங்களை நாம் பூர்வம் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யம். கார்ய காரண வஸ்துக்களின் தத்வத்தை விசாரிக்குமவர்கள், ஸத் கார்ய வாதிகளென்றும் அஸத்கார்ய வாதிகளென்றும் இருவகைப்படுவார்கள். காரண வஸ்துவை ஸத்யமென்று (அதாவது—பரமார்த்தமென்று) ஒத்துக் கொள்பவர்கள் ஸத்கார்ய வாதிகள்; அதை அஸத்தென்றும் ஸகலமான கார்ய வஸ்துக்களும் பூர்வம் இல்லாமலே புதிதாக உத்பத்தியை அடைகின்றனவென்றும் சொல்பவர்கள் அஸத்கார்ய வாதிகள். அத்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் காரண வஸ்துவைப் பரமார்த்தமென்று ஒத்துக் கொள்ளுகிறபடியால் அவர்களிருவரும் ஸத்கார்ய வாதிகள் தாம்; ஆனால், விசிஷ்டாத்வைதிகள் கார்ய வஸ்துவான ப்ரபஞ்சமும் பரமார்த்தமென்று சொல்லுகிறார்கள்; அத்வைதிகள் 'அது கேவலம் ப்ரமத்தால் ஏற்படுகின்றது, ஆகையால் அது அபரமார்த்தமே' என்று சொல்வார்கள். இவர்கள் இருவருக்கும் இம்மாதிரி கொள்கைகளைக் கொள்ள, ச்ருதியே ப்ரமாணம். ச்ருதி ப்ராமாண்யத்தை அநாதரித்து, கேவலம் அநுமாநத்தையே பலமான ப்ரமாணமாகக் கொண்டு தத்வ வாதம் செய்பவர்கள் சிலருண்டு; ஸாங்க்யர்கள்

𑌅𑌤 𑌏𑌵 ‘𑌅𑌸𑌦𑍇𑌵𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 𑌅𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌦𑌨𑌿𑌷𑍇𑌧𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇। “𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑌜𑍍𑌜𑌾𑌯𑍇𑌤?”

ப்ரஹ்மத்துக்கு முன்ன கார்ய காரண பாவம் முதலானதின் பரமார்த்தத் தன்மையை ஜ்ஞாபிக்க ப்ரவ்ருத்திக்கிறபடியால், இக்த ப்ரகரணத்தில் கார்ய காரண பாவத்தின் அஸத்யத் தன்மையை விவரிக்கும் அஸத் கார்ய வாதம், “𑌅𑌸𑌦𑍇𑌵𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍” (இதுவே முன் காலத்தில் அபரமார்த்தமாக இருந்தது) என்னும் வாக்யத்தால் ப்ரஸ்தாவிக்கப்பட்டு நிஷேதிக்கப்படுகின்றது. “𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑌜𑍍𑌜𑌾𑌯𑍇𑌤?” (இது எப்படி ?) ; அதாவது—‘முன் அபரமார்த்தமாக

வைசேஷிகர்கள், பௌத்தர்கள் முதலான தத்வ வாதிகள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் ஸாங்க்யர்கள், ‘அசேதனமான ப்ரதானம் என்று சொல்லப்படும் வஸ்துவே ஜகத்காரணம்’ என்று சொல்வார்கள்; ஈச்வரன் ஒருவன் உண்டு என்று அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்களில்லை. ஆனாலும், அவர்களால் ஒத்துக்கொள்ளப்படும் ப்ரதானம் என்னும் காரண வஸ்துவைப் பரமார்த்த மென்றே அவர்கள் சொல்லுகிறபடியால், அவர்களும் ஸத் கார்ய வாதிகளாகத் தட்டில்லை. வைசேஷிகர்கள், தர்க்க பலத்தைக் கொண்டு ஈச்வரன் என்று ஒருவனை ஒத்துக் கொண்ட போதிலும், ‘ப்ரபஞ்சம்முழுவதும் பூர்வம் இல்லாமலே பிறகு புதிதாக உத்பந்நமாகி இருக்கின்றது’ என்று வாதிக்கிறபடியால், அவர்கள் அஸத் கார்யவாதிகளைச் சேர்ந்தவராகிறார்கள். பௌத்தர்களும், அம்மாதிரியே, ‘காரணம் என்பது அபரமார்த்தம்’ என்று சொல்லுகிறபடியால், அஸத்கார்யவாதிகளே; ஆனால், இவர்கள் ‘கார்ய வஸ்துவும் அபரமார்த்தம்’ என்று வாதிக்கிறபடியால், இவர்களுக்கும் வைசேஷிகர்களுக்கும் வாசி உண்டு.

இவ்விடத்தில் ப்ரதிக்ஷேபிக்கப்படும் மதம் வைசேஷிகர்களைக் குறிக்கின்றது என்று ஸ்ரீராமாநுஜாசார்யரும், பௌத்தர்களுள் ஸர்வ சூந்ய வாதிகளான மாத்யமிகர்களைக் குறிக்கின்றது என்று ஸ்ரீ சங்கராசார்யரும் சொல்லுகிறார்கள். வைசேஷிகர்கள் மாத்யமிகர்கள் இந்த இருவர்களுடைய மதங்களின் கண்டனமும் அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் இருவர்களுக்கும் இஷ்டம்; ஆனால் எவர்களுடைய கண்டனம் ப்ரகரணத்திற்கு ஒத்திருக்கின்றது என்பதைப் பார்த்தால், விசிஷ்டாத்வைதிகள் சொல்வது போல, வைசேஷிகர்களுடைய கண்டனமே ஸங்கதமாகத் தோன்றும் என்பது தான் இவ்விடத்திற் செய்யப்படும் உபபாதனம்.

𑌇𑌤𑌿। ‘𑌪𑍍𑌰𑌾𑌗𑌸𑌤 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌹𑍇𑌤𑍁𑌕𑌾’ 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌦𑍇𑌵𑍋𑌪𑌪𑌾𑌦𑌯𑌤𑌿 “𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑌜𑍍𑌜𑌾𑌯𑍇𑌤?” 𑌇𑌤𑌿। ‘𑌅𑌸𑌤 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌭𑌵𑌤𑌿’ 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃; 𑌯𑌥𑌾 𑌮𑍃𑌦 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌘𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌮𑍃𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 𑌸𑌤 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌮 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌯𑍋𑌗𑌃।

இருந்த ஒன்றிலிருந்து மற்றொன்று உத்பந்நமாகின்றது என்றால், அந்த உத்பத்தி ஆச்ரய மற்றதாக வன்றோ ப்ரஸங்கிக்கும்?’ என்று சொன்னதாயிற்று. இந்த அர்த்தமே “𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑌜𑍍𑌜𑌾𑌯𑍇𑌤?” (எப்படி அபரமார்த்தமான ஒன்றிலிருந்து பரமார்த்தமான மற்றொன்று உண்டாகும்?) என்பதால் உபபாதிக்கப்படுகின்றது. அதாவது—‘அபரமார்த்தமாக இருக்கு மொன்றிலிருந்து உத்பந்நமாகும் மற்றொன்று, அபரமார்த்தமாகவேயன்றோ இருக்கவேண்டும்? மண்ணிலிருந்து உத்பந்நமாகும் குடம் முதலானவை மண்ணாகவே இருப்பன போல’ என்று சொன்னதாயிற்று. ‘பரமார்த்தமாக இருக்கு மொன்றிலிருந்து மற்றொன்று உத்பந்நமாகின்றது’ என்று வ்யவஹரிக்கு மிடத்திற் சொல்லப்படும் ‘உத்பத்தி’ என்பதற்கு, ‘வ்யவஹார விசேஷத்திற்குக் காரணமாயிருக்கும் ஒரு அவஸ்தா விசேஷத்தின் சேர்க்கை’ என்பது பொருள்.

𑌅𑌤 𑌏𑌵—இந்த ஸத்வித்யையில் ஸத்கார்ய வாதமே ப்ரஸக்தமாயிருக்கிறபடியால் அஸத் கார்யவாத நிரஸனம் இவ்விடத்திற்செய்யப்படவேண்டும் என்பது குறிப்பு.

𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌹𑍇𑌤𑍁𑌕𑌾—உத்பத்தி என்பது ஆச்ரயமற்றதாகிவிடும். இவ்விடத்தில் ‘𑌹𑍇𑌤𑍁’ என்பதற்கு ‘ஆச்ரயம்’ என்பது பொருள். பரமார்த்தமான ஒரு த்ரவ்யத்துக்கு வேறு ஒரு அவஸ்தையின் சேர்க்கை உண்டாவதே உத்பத்தி என்று சொல்லப்படுகிறபடியால் உத்பத்தி நிராச்ரயமாக இருப்பது அஸங்கதமாகும் என்பது தாத்பர்யம்.

𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑌜𑍍𑌜𑌾𑌯𑍇𑌤?—அஸத்திலிருந்து எப்படி ஸத் உண்டாகும்? அதாவது—அஸத் எப்படி ஸத்தாக மாறும்? என்பது கருத்து. மண்ணே குடமாக மாறுவதை, ‘மண்ணிலிருந்து குடம் உண்டாகின்றது’ என்று சொல்வது போல் இவ்விடத்தில் ப்ரயோகம்.

𑌅𑌸𑌤 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌭𑌵𑌤𑌿—காரணத்தில் இருக்கும் குணமே கார்யத்திலும் இருத்தல் வேண்டும் என்பது வைசேஷிகர்களின் மதம். நூலில் இருக்கும் வெண்மை வஸ்த்ரத்திலும் இருப்பது போல.

ஸத இத்யுக்தம் பவதி—ஸதேவ காரணபூதம் த்ரவ்யமவஸ்தாந்தராபத்த்யா கார்யமித்யுச்யத இதி । ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாநம் ப்ரதிஜ்ஞாவிஷயம், ததஸத்கார்யவாதே ந ஸித்த்யதி; ததா ஹி—நிமித்த ஸமவாய்யஸமவாயி ப்ரப்ருதிபி: காரணை ரவயவ்யர்த்தாந்தரம் கார்யம் த்ரவ்யமுத்பத்யத இதி காரணபூதா அவயவா: கார்யபூதஸ்ய அவயவிநஸ் தத்பின்னத்வாத் ஜ்ஞாததா கதமபி ந ஸம்பவதி । 'கதமேவம்பி த்ரவ்யாந்தரம் நிரூப்யதே?' இதி சேத், 'காரண த்ரவ்யாந்தரமேவ கார்யம் த்ரவ்யமுத்பத்யத இதி வாதின: ஸம்ப்ரதிபந்ந

ஸத இதி............இத்யுக்தம்—இதனால் சொல்லப்படுவதென்னவென்றால், 'ஒரே த்ரவ்யம் முதலில் காரணமாக இருந்துகொண்டு, பிறகு வேறொரு அவஸ்தையுடன் சேர்க்கையை அடைந்தால், அப்பொழுது அந்த த்ரவ்யமே கார்யம் என்று சொல்லப்படுகின்றது' என்பது தான். 'ஒரு த்ரவ்யத்தின் ஜ்ஞாநத்தால் மற்றை எல்லா த்ரவ்யங்களின் ஜ்ஞாநமும் ஏற்படுகின்றது' என்பது இந்த ப்ரகரணத்தில் ப்ரதிபாதிக்கப்படும் விஷயம்; அது அஸத்கார்ய வாதத்தில் ஸித்திக்கமாட்டாது. ஏனென்றால், 'நிமித்தம் ஸமவாயி அஸமவாயி என்னும் இவை முதலான காரணங்களினால், அவயவி என்று சொல்லப்படும் கார்யம், காரணமாயிருந்த த்ரவ்யத்தைக் காட்டிலும் வேறுபட்ட மற்றொரு த்ரவ்யமாகவே உத்பாதநம் செய்யப்படுகின்றது' என்பது அஸத்கார்ய வாதிகளின் கொள்கை; காரணமான வஸ்துவைக் காட்டிலும் கார்யமான வஸ்து வேறுபட்டதென்று சொல்லும்பக்ஷத்தில், காரணத்தின் ஜ்ஞாநத்தினால் கார்யத்தின் ஜ்ஞாநம் ஒரு பொழுதும் ஸம்பவிக்கமாட்டாதன்றோ? ஆனால், 'அவயவி என்று சொல்லப்படும் கார்யமான வஸ்து தனது காரணமான வஸ்துவைக் காட்டிலும் வேறுபட்ட த்ரவ்யம்' என்பதை எப்

ஏக விஜ்ஞாநேந—இவ்விடத்திற் சொல்லப்படுகிறது என்னவென்றால்—'ஒன்றை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகி விடும் என்பது ஸத்வித்யையில் செய்யப்பட்டிருக்கும் ப்ரதிஜ்ஞை. அது வைசேஷிக மதத்திற்கு அநுகுணமன்று. காரண வஸ்துவைக் காட்டிலும் கார்ய வஸ்து வேறு பட்டதென்பதன்றோ அவர்களுடைய கொள்கை? அப்பொழுது காரண வஸ்துவை அறிந்தால் கார்ய வஸ்துவும் அதனாலேயே அறியப்படுகின்றது என்பது அநுபபந்நம். ஆகையால் ப்ரதிஜ்ஞாதமான அர்த்தத்திற்கு வைசேஷிக மதத்தின் நிராஸம் அவச்யம் அபேக்ஷிதம்' என்பதே.

நிமித்த ஸமவாய்யஸமவாயி ப்ரப்ருதிபி:—வைசேஷிகர்களுடைய மத ப்ரகாரம், காரணங்கள் மூன்று வகைப்படும். அவை: நிமித்த காரணம், ஸமவாயி காரணம், அஸமவாயி காரணம். இவைகளின் லக்ஷணங்கள் இவ்விடத்தில் அநபேக்ஷிதங்களாகையால் அவைகளை விவரிக்காமல் விட்டு விடுகிறோம்.

கல்பம் அவனது; அதின் ஸந்நிதியிலே கர்மமடியாக வந்த இவன் ஸங்கல்பம் ஜீவிக்கவோ? ஸர்வசக்தி ஸங்கல்பத்தை விஷய சபலனுடைய ஸங்கல்பம் அழிக்கவோ?

நாம் என் கொண்டு உன்னை வெல்ல வென்ன, 'புண்டரீகாக்ஷ'—அழகிய கண்களாகிற ப்ரஹ்மாஸ்த்ரத்தை யுடைய உனக்கு வெல்ல வொண்ணாத துண்டோ? சேதநர் சேதநங்களை யகப்படுத்துவது கண்வழியாலே யாகையாலே திருக்கண்களாலே ஜயித்தா யென்கை ஸ்வதந்த்ரனை முறையைக் காட்டி மீட்கலாம்; விஷய ப்ரவணனை மீட்க அழகல்லது பரிகாமுண்டோ?

தியான உம்முடைய ஸத்ய ஸங்கல்பத்தை விஷய சபலனை வென்றால் அழிக்க முடியுமோ? வென்கிறான்.

'புண்டரீகாக்ஷ'—அநாதிகாலமாய்க் கழிந்த ஜந்ம மெல்லாம் நாம் உம்மை 'ஜிதந்தே' என்று தொடர்ந்து பிடித்தாலும் 'நமஸ்தே' யென்று நம்மை ஜயித்து அநாதரித்துப் புறம்பே போன நீர், இப்போது தோல்வியடைந்தது எத்தாலே யென்று கேட்க, அக்காரணம் இக்கண்ணழகைக் கண்ணுற்றதன்றோ? என்கிறான். 'புண்டரீகாக்ஷ' என்று ஏழைய ராவி யுண்ணும் இவ்வழகிய திருக்கண்களாகிற ப்ரஹ்மாஸ்த்ரங்களையுடைய உமக்கு ஜயிக்க முடியாத துண்டோ என்கிறான். பணையோடு பணை தத்திக் கானகத்தே திரியும் திர்யக்குக்களும்கூட "கமலபத்ராக்ஷ ஸ்ப்ருஷ்ட்வா ஸகல ப்ரமோஹந:" என்று மதிமயங்கி மோஹிக்கும்படியன்றோ இத்திருக்கண்களின் திருவழகு தோன்றுவது? அன்றிக்கே, 'கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே' என்கிறபடியே இத்தனை காலமும் இத்திருக்கண்களுக்கு விஷயமாகாத மஹா பாபத்தினாலன்றோ வேல்கணார் கண்ணுக்கு விஷயமாய் வினையுடம் பொன்றி வீணாகிப் போந்தே னென்கிறான். இதனால், "பச்யத்யேநம் ஜாயமானம் ப்ரஹ்மா ருத்ரோऽதவா புந:। ரஜஸா தமஸா சாஸ்ய மாநஸம் ஸமபிப்லுதம்" என்கிறபடியே விரூபாக்ஷாதிகளுடைய வீக்ஷணத்திற்கு விஷயமாய் ரஜஸ் தமோந்தகாரத்தில் அகப்பட்டு அலமராதபடி "ஜாயமானம் ஹி புருஷம்" என்கிறபடியே பிறவிப் பிணி மூப் பிறப்பறுக்கும் புண்டரீகாக்ஷ வீக்ஷணத்திற்கு விஷயமானபடியைப் பாக்ய விசேஷமாக அநுஸந்திக்கையால் தேவதாந்தர வைலக்ஷண்யமும் வ்யக்தமாகிறது.

ஆனாலும், நமது கடாக்ஷத்திற்கு விஷயமாகி யிருந்தும், ஐச்வர்ய மத மத்தர்களாய் நம்மையும் அநாதரித்து ஸம்ஸரித்துப் போந்த சேதநர்களில்லையோ வென்று ஸர்வேச்வரனைக் கேட்க 'நமஸ்தே' என்கிறான். ஒழிவில் கால மெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைப் பணி பெற்று வாழவேணு மென்றன்றோ அடியேன் ஆசைப்படுவதென்கி

நமஸ்தே—ஆரதை ஆர் வென்றதென்னில்; ஆராய்ந்தவாறே உன்னதை நான் அபஹரிக்க, என்னை ஜயித்து, நீயே உன்னதைக் கைக்கொண்டாயாயிருந்தது; "அஹமஸ்மி ந மம"; "ஹமவத வஶவாஹமஸ்மி" என்னக் கடவதிறே; நமச் சப்தம் சரணார்யாய மாகையால் ப்ரபதந மென்னவுமாம்; எங்ஙனே யென்னில்: கண்ணழகிலே ஈடுபட்டு மிடுக்கர் கையாலே அசக்தாதிகாரமான உபாயத்தைப் பற்றுகிறான். ப்ராப்யத்தில் ருசி பிறந்தால் அத்தை லபிக்கும் ஸாதநமிறே அநந்தரம் தேட்டம்; அத்தைச் சொல்லுகிறது. விஷயாந்தரங்களில் துவக்கை அறுத்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக என்னுத்மாவைத் தந்தே னென்று ஆத்ம ஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறதென்றுமாம். "எனதாவி தந்தொழிந்தேன்" (திருவாய்மொழி 2—3—4) என்னுமாப்போலே; இது வகைப் பொருள்.

றான். "பத்தாஞ்ஜலி புடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வரூப ப்ராப்தமான சேஷவ்ருத்தியை இங்கு 'நம:' என்று சொல்லுகிறது.

இதனால் அநுகூலோபதேசத்தை ஆதரித்து வணங்கி வழிபட்டு வாழ்ந்திடாதே, "ந நமேயம் து கஸ்யசித்" என்று சொல்லிப்போன விபரீதனிற்காட்டிலும் ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்தும் மோக்ஷத்தை அபேக்ஷியாதே, "ந்யுதா: ஸ்ரீணாம் வாஞ்சந்து ஹரிகாராதிவெஸ்வராக" என்று வேண்டிற்றில்லாமல் தரும் வேந்தரிடம் கிட்டி, உமி மூட்டையை அபேக்ஷிக்கும் பாக்யஹீநன் போல அத்யல்பமான ஐச்வர்யத்தைக் கேட்டு மதி கெட்டவனானேன் என்று நிர்வேதம் கொண்ட த்ருவாதிகளிற்காட்டிலும் ஸ்வரூப ப்ராப்தமான ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்யத்தை அபேக்ஷிக்கும் இவ்வதிகாரியின் வைலக்ஷண்யம் சொல்லப்பட்டதாயிற்று. 'ஆராவமுதே' யென்று அநுபவித்துச் சொன்ன அநந்தரமே 'அடியேன்' என்று சொல்லும்படியன்றோ அவ்வமுதத்தின் இனிமை இருப்பது! இவ்வாசி யறியாதாரன்றோ ஸம்ஸரித்துப் போந்ததென்கிறான். அன்றிக்கே அநாதிகாலமாக வேரூன்றியிருந்த விஷய வாஸனையை வேரறுத்து ப்ராப்ய ருசியை வளர்த்துத் தந்த இம்மஹோபகாரத்தால் மெய்ம் மறந்து திருவடிக்குத் திருமேனியை ப்ரத்யுபகாரமாகக் கொடுத்ததுபோலே பெருநல்லுதவிக் கைம்மாறாக 'நம:' என்று 'எனதாவி தந்தொழிந்தேன்' என்கிறான்.

அன்றிக்கே, "ஊர்த்வ ஸ்வஹிதாஸ்யெஷு நமஸ்க்ருத்ய ஜநார்த்தநம்" என்று நமச்சப்தம் சரணாகதி வாசியாக ஸம்ப்ரதாயத்த மாகையினாலே திருக்கண்ணழகைக் கண்டு தோற்றுத் திருவடியின் கீழே விழுந்ததன் பலமாக அஹங்கார மமகாரங்க ளற்று, ஆத்ம ஜ்ஞாநம் பிறந்து ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தில் ஆசையுண்டாகையாலே அதற்கு அநுகுணமான கர்மயோகாதிகளைக் "குளித்து மூன் றனலை யோம்பும் குறிகொளந் தணமை தன்னை, ஒளித்திட்டே னென்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்" என்கிறபடியே அநுஷ்டிக்க அசக்தனான தன் அதிகாராநுகுணமான சரணா

நமஸ்தே அஸ்து—அப்படி எனக்காகை தவிர்ந்து உனக்கேயாம்படி பண்ணியருள வேணும்; "மனக்காரமை மன்னியுண்டிட்டா யினியுண்டொழியாய்" (திருவாய்மொழி—10—10-6) என்னுமாப் போலே; ருசியைப் பிறப்பித்துத் தன்பேறாக உபகரியாநிற்க, மேல் விழுந்து அர்த்திப்பானென் என்னில்: ருசியை விளைப்பித்து ஸ்வரூப ஜ்ஞாநத்தை உண்டாக்கினவாறே ஸ்வரூபாநுகுணமான அடிமையை ப்ரார்த்திக்கிறான்; கூனி கூன் நிமிர்ந்து யோக்யதை பெற்றவாறே, "வஸ்த்ரம் ப்ரமரஹஸ்த் மொரிவ ஸ்மெஹம் ப்ரஜெதி வெ" என்று மடிபிடித்தாப்போலே இங்கும் ஆத்மாவினுடைய கோணுகையாலே கண்ணழகாலே நிமிர்த்துக் கொண்டா னென்க. அஹங்கார மமகாரமாகிற கோண் போய்ப் பாரதந்த்ர்யம் ப்ரகாசித்தாலிறே கைங்கர்ய ரஸத்துக்கு யோக்யமாவது. ஸ்ரீ மாலாகாரரை அழகாலே ருசியைப் பிறப்பித்து, "வாஸ: வாஸ: ப்ரணம்யாலம் மாலாகாரோ மஹீபதிம்" என்று திருவடிகளிலே விழும்படி பண்ணி அடிமை கொண்டானிறே.

கதியைப் "புகலொன் றில்லா வடியேனுன் னடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே" என்கிறபடியே ஆகிஞ்சந்ய புரஸ்ஸரமாக அநுஷ்டிக்கிறான் என்று சொல்வது பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் பூர்வோத்தர பத ஸந்தர்ப்பத்திற்கும் மிகவும் பொருத்தமானது.

இங்கு 'தே' யென்கிற ஸர்வ நாம சப்தத்திலே அசரண்யனுடைய சரணாகதிக்கு அவச்யாபேக்ஷிதங்களான சரண்யனுடைய ஸௌலப்ய காருண்யாதி கல்யாண குணங்களுடைய பூர்த்தி சொல்லப்படுகிறது.

அன்றிக்கே 'தே' யென்று வ்யக்தி விசேஷத்தைக் குறிப்பிடுவதால், இதற்கு முன் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து, பழுதே போன பல பகலும் பிறவி நோய்க்கு மருந்தறியாத ப்ரம்ஹ ருத்ராதிகளான திருவில்லாத் தேவர்களுடைய திருவாசல் தோறும் நுழைந்து திரிந்து நோவுபட்ட யான், அத்துயர மெல்லாம் தீர அத்தேவர்களுக்கும் தேவரான உன் தேனே மலரும் திருப்பாதம் சேர்ந்தே னென்று ஸந்தோஷிக்கிறான் என்னவுமாம்.

உமது துயரம் தீரவேணுமானால் நாம் அதற்கு எதற்காகக் கடவோமென்று ஸர்வேச்ரன் கேட்டருள, "விஶ்வபாவந"— ப்ரளய காலத்தில் உரு மாய்ந்து கிடந்த இவ்வுலகத்தைப் படைத்தது நீயன்றோ? என்கிறான். "ஸோऽகாமயத ப்ரஹ்ம" என்றும், "அந்நலனுடை யொருவன்" என்றும் சொல்லுகிறபடியே ஆநந்த ரூபியாய் ஆநந்த பூர்ணனான உம்மை அந்தமில் பேரின்பத் தடியரான நித்ய ஸூரிகள் நித்யமாய் அநுபவித்து ஆநந்திக்குமாப்போலே, நிறையொன்று மிலா நீசரான ஸர்வ ஸம்ஸாரிகளும் அநுபவிக்க வேணு மென்கிற திருவுள்ளத்தாலே யன்றோ அன்றிவ் வுலகத்தை ஆக்கியருளினது என்கிறான். அன்றிக்கே, மான் பிடிக்குமவன் வந பெங்கும் வலை விரித்து வைக்குமாப்போலே, அடியே னொருவன் உஜ்ஜீவிப்பதற்காக வன்றோ அன்று மூந்நீர் ஞாலம் முழுவதும் படைத்தருளினது என்கிறான். ஆனாலும் அடியிலே நம்மை மறந்து போன

விஹ்வாவந—மேல் அபேக்ஷிதம் செய்கைக்கு ப்ராப்தி சொல்லுகிறது' விஹ்வம் ஹாவயதீதி விஹ்வாவந: ; உரு மாய்ந்து கிடந்த இந்த ஜகத்தை உண்டாக்கினவ னல்லையோ? இல்லாததை உண்டாக்கினவனுக்கு உள்ளதுக்கொரு குணம் விளைப்பிக்கைக்குப் பணி உண்டோ? முமுக்ஷு விஸ்ருக்ஷயா வன்றோ பகவத் ஸ்ருஷ்டி.

ஹ்ருஷீகேச—ஸ்ருஷ்டி காலத்தில் விலக்கும் பரிகரமில்லை. இப்போது உன் இந்த்ரியங்களைத் திருத்த வொண்ணுமையாலே விலக்கும் பரிகரமுண்டோ வென்னில் ; அவையும் நீ இட்ட வழக்கன்றே? "ஹ்ருஷீகாணீந்த்ரியாணயாஹு தேஷாமீசோ யதோ பவாந் | ஹ்ருஷீகேச இதி க்யாத:" என்றும், "இருடீகேச னெம்பிரா னிலங்கை யரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான்" (திருவாய்—2-7-10.) என்றும் சொல்லக் கடவதிறே. இந்த்ரியங்களுக்கு என்னோடு உண்டான ஸம்பந்தம் கர்மோ

நீர் இப்போது என்ன பலம் பெறுவதற்காக நமதடியைத் தொடர்ந்தெழுவ தென்று ஸர்வேச்வரன் கேட்டருள, "நமஸ்தேஸ்து"—அடியேனுடைய ஸர்வாநிஷ்டமும் தீர்ந்து ஸர்வாபீஷ்டமும் நான் பெறவேணு மென்கிறான்.

இங்கு, 'ந:'– 'தே'– 'அஸ்து' என்கிற முன் வாக்யத்தில் மகாரம் ஜீவனைச் சொல்லுகிறதாய், மேலிருக்கிற ஷஷ்டியால் ஜீவனுடைய தென்கிற ஸம்பந்தத்தைச் சொல்லி, இங்கு அவச்யமாய் ஆகாங்க்ஷிதமான 'ஸர்வம்' என்றொரு பதத்தை அத்யாஹரித்து, 'ந: ஸர்வம் தாஸ்து' என்கிற வாக்யத்தினால் 'நானும் என்னுடைமை' யென்று பேர்பெற்ற எல்லா வஸ்துக்களும் எனக் குரியதாகை தவிரவேணும் என்று அபேக்ஷிக்கப்படுகிறது. இதனால் "ஸர்வதி அஹங்காரோ மமதா:" என்கிறபடியே ஸாம்ஸாரிக ஸர்வ துக்கங்களுக்கும் நிதாநமான மமகாரத்தின் நிவ்ருத்தியை அபேக்ஷிப்பதால் ஸர்வாநிஷ்டங்களுடைய நிவ்ருத்தி ப்ரார்த்திக்கப் பட்டதாயிற்று.

இரண்டாவது வாக்யமான "தே அஸ்து" என்பதனால் அடியேனையும், என்னுடைமை யென்று பேர்பெற்ற ஸர்வ வஸ்துக்களையும், "தனக்கேயாக வெனைக் கொள்ளு மீதே" என்கிறபடியே தேவரீருடைய கைங்கர்யோபகரண மாகும்படி ஸ்வீகரித் தருளவேணு மென்று அபேக்ஷிக்கிற தாகையினாலே ஸர்வாபீஷ்ட ப்ரார்த்தனையும் செய்யப்பட்ட தாயிற்று. ஆக இவ்விரண்டு வாக்யங்களாலும் இந்த ஸம்ஸாரி சேதநன், சார்ந்த விரு வல்வினையும் சறித்து மாயப் பற்றறுத்து, நலமந்த மில்லதோர் நாடு புகுந்து, அந்தமில் பேரின்பத் தடியரோ டொன்கூடி அவ்வாரா வமுதத்தைப் பருகிக் களித்து, அழிவிலா வடிமை செய்து வாழவேணு மென்று அபேக்ஷித்ததாயிற்று.

ஆனாலும், அநாதி காலமாய் அற்பசாரங்க ளவைசுவைத்துச் செருக்கடைந்து புறம்பே திரிந்த புலனைந்து சூழ்ந்த உம்மால் விஷய வாஸனையை இனி விடமுடியுமோ என்ன, "ஹ்ருஷீகேச" என்கிறான். ஹ்ருஷீக மென்று இந்த்ரியங்களுக்குப் பெயராய், அவைகளுக்கு ஈசனே! யென்று ஸாபிப்ராய ஸம்போதநத்தினால்

பாதிகம் ; "யஸ்ய சக்ஷுஷி திஷ்டந்—வாதி திஷ்டந்" என்கிறபடியே நிருபாதிக ஸம்பந்தம் உன் பாடேயன்றே?

மஹாபுருஷ—சக்தி உண்டானாலும் வல்லதெல்லாம் செய்வாருண்டோ வென்னில் ; புருஷ—"புரு பஹு ஸநோதீதி புருஷ:" என்னும்படியே மறித்து உன்பாடு வரவேண்டாதபடி அபேக்ஷிதங்களை மிகவும் கொடுக்கவல்ல பரமோதார னல்லையோ? அன்றிக்கே, உன்னையும் உன் னுடைமையையும் "ஸ்த்ராநம்" என்கிறபடியே அர்த்தியாய்க் கொடுக்கை ; "ஸ ஸர்வாநயித்ரே த்ருஷ்ட்வா ஸதைத்ய ப்ரதிநந்த்ய ச" என்னக்கடவதிறே.

பூர்வஜ—கீழ்ச் சொன்ன ஔதார்யம்தன்னை அநுஷ்டாநத்தாலே விவரிக்கிறது. ஸ்ருஷ்டியோடு அவதாரத்தோடு உபாயத்தோடு வாசியற இழவுபேறு தடக்கமான எல்லாத்துக்கும் முற்பாடனல்லையோ? "பஹு ஸ்யாம்" என்று ப்ரயோஜந

உடையவ னிட்ட வழக்கா யன்றே உடைமை இருப்பது? அநாதி காலமாய்த் தேவரீரிட்ட வழக்காயன்றே அவ்விந்த்ரியங்கள் அடியேனை அடிமைக்கண் அன்பு செய்விக்காது துயரமேதரு துன்பவின்ப வினைகள் சூழ்ந்திடச் செய்ததும். ஆகையால் இனிமேல் அப்புலன்களைப் புறம்பே போகாதபடி,

வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தாம் தொழா—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளாசெவி.

என்னும்படி தேவரீரே பண்ணியருள வேணு மென்கிறான்.

ஆனாலும் 'நின் சரணல்லால் சரணில்லை' யென்றும், 'களைகண் மற்றிலேன்' என்றும், 'ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்' என்றும் சொல்லுகிறபடியே அநந்ய கதிகளாய் வந்து ஆச்ரயித்தவர்களுக்கன்றோ நாம் யோகக்ஷேமம் வஹிப்பதாக அருளிச்செய்தது. நீர் முன்னம் நும் மின்கவி கொண்டு நும் நுமிட்டா தெய்வ மேத்தின வாஸனையாலே, இனி மற்றின்கோர் புதுத்தெய்வம் திருவடி தொழாமலிருப்பீரோ? வென்ன, "மஹாபுருஷ" என்று சொல்லுகிறான். இங்கு, "புருஷ" என்று அதிகவாசியாய் ஷண—தாநே என்கிற தாதுவிலே நிஷ்பந்நமான ஷ— சப்தத்துடன் சேர்ந்து அதிகமாகக் கொடுப்பவனைச் சொல்லுகிறது. கீழ் 'மஹத்' சப்தம் மஹாபூஜாயாம் என்கிறபடியே 'பூஜ்யன்' என்கிறது. ஆக இத்தால், எல்லாராலும் பூஜிக்கக்கூடியவனும் அதிகமான ஔதார்ய முள்ளவ னென்று அர்த்தமாய், "கொள்ளமாளா வின்ப வெள்ளம் கோதில தந்திடும் வள்ளல்" என்கிறபடியே அநந்தமான பலன்களைக் கொடுக்கிறவன் என்றதாயிற்று.

"பாத ஸகலம் ஏதத் ஸம்ச்ரிதாய அக்ஷய" என்கிறபடியே ஸர்வேச்வரன் தன் திருவடியை ஆச்ரயித்தவர்கள் அநுபவிப்பதற்காகவே தன்னையும் தன் உபய விபூதியையும் வைத்திருப்பதாக வன்றோ பூர்வர்களின் பாசுர மிருப்பது.

மும் அபிமாநமும் தன்னதானவோபாதி "ஸ ஹனகாகீ நாறெ,த" என்று மிழவும் தன்னதாகச் சொல்லிற்றிறே. அவதாரத்திலும் ஸ்ருஷ்டமான ஜகத்திலே நம்மை அபிமுகிகளாகக் கடவார் என்னும் நோயாசையாலே "ஸஂஹவாஜ்யாதூ ஊயயா" என்று ஸ்வேச்சையாலேயாய் இருப்பது. "ஸ ஹி தெவெரயிஓதொ ஜஹெ" என்று தேவர்களுடைய வர்த்தித்வம் இல்லையோ'வென்னில்: அது வ்யாஜம்; ஸாது பரித்ராணமே ப்ரயோஜநம். "வரித்ராணாய ஸாயூநாம்" என்று தொடங்கி "யஂஹவஂஸ்தாவநாயஊாய ஸஂஹவாமி யுகெ யுகெ" என்றானிறே. அர்ஜுநனுடைய யுத்த ப்ரோத்ஸாஹந வ்யாஜமாக ஸ்வ விஷய பக்தியோகத்தை அவதரிப்பித்தாப்போலே "உவாயொவெயசெவ தஹிஹ தவ தகவ" என்று உபேய பாவத்தோபாதி உபாயபாவமும் நித்யமிறே. ஒருத்தன் ஸ்வீகரித்த போதாக உபாயமாகிறானென்றிறே. போக வேளையிலும் பஞ்ச லக்ஷம் குடியிற் பெண்களிற் காட்டில், தன்

அன்றிக்கே, இம்மகத் சப்தம் 'ஹ ஊயாஜெயம்' இத்யாதி வேதங்களால் சொல்லப்பட்ட தாநம் செய்பவனுக்கு வேண்டியதான குண விசேஷங்களைச் சொல்லுகிறதாய், "ஸஹவஊா நயிஓநொ ஓுஷூா ஸஜெதூ வூகிநஜூஅ" என்கிறபடியே அவர்களோடு கலந்திருந்து புகழ்ந்து பேசி, அவர்களைப் பெருமைப்படுத்தி, ஆநந்தத்துடன் அளிப்பதைச் சொன்னதாகவுமாம். "ஶீயூூக்ஷூணி வெஷூித ஹூணி ஊஹ தூஷூாவ ஊநாக்ஷிரெ" என்கிறபடியே இக்காலத்தவர், யாசகர்களைக் கண்டவுடன் கண் மூடுவதும் கதவடைப்பதும் புருவம் நெறிப்பதும் பரிஹஸிப்பதுமான துர்க்குணங்களில்லாமலென்றபடி. அன்றிக்கே, தான் பெற்ற குழந்தை பால் குடிக்கக் கால்பிடிக்கும் தாய்மாரைப் போல், பிறருக்கென்று கொடுக்கை யன்றிக்கே "தனக்கேயாக வெனைக் கொள்ளு மீதே" என்கிறபடியே தன் பேறாகக் கொடுத்து, "உஜாரா ஸவஊ ஸவெவெதெ" என்று கொண்டாடி, தான் பயன் பெற்றதாக இருப்பதை உத்தேசித்து "ஊஹாவ-ஷூ:" என்கிறான். ஆக இப்படிகளால் சொல்லித்தாய்த் தென்னென்னில்: "ஷூிதொரவிஜெ-ஊகஜ-ஹிஹஊரெ ஊயவூதொ ரெக்ஷ-ரகஂஹி வீக்ஷிதெ" என்கிறபடியே அலர்ந்த வம்புயத்தின் நடுவிலிருந்து ஆறாகப் பெருகும் தேனை யருந்தும் மதுகரமானது முள்ளிப் பூவின் முகத்தில் விழிக்காதது போல், புருஷோத்தமனை ஆச்ரயித்துப் பூர்ணமான ஐச்வர்யம் பெற்ற யான் பிக்ஷுகரான மற்ற தேவரை வணங்க ப்ரஸக்தியுண்டோ என்றபடி.

ஆனாலும், இதற்கு முன்பு யாரையாவது நாம் இப்படி ரக்ஷித்ததை நீர் கண்டதுண்டோ? என்ன, "வ-ஞவஊஜ" என்கிறான். "வரித்ராணாய ஸாயூநாம்", "ஸஂஹவாஜ்யாதூஊயயா" என்று ஸ்ரீகீதைகளில் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவே காலநியமமின்றிக்கே நினைத்தபோது அவதரிப்பதாக அருளிச் செய்ததும், மனிசர்க்காக நாட்டிற் பிறந்து படாதன பட்டதும், புல்லெறும்பாதிகளை நற்பாலுக் குய்த்தருளினதும் பொய்யோ? வென்கிறான்.

ஜெவாநாம் ஊாநவாநாம் அ ஸாஊாநூ ஊயிஜெவதம் ;
ஸவஊா அரணஅஂஅம் வூஜாஜி ரரணஂ தவ ॥ (2)

னுடைய முற்பாடு தோற்றுகைக்காகவிறே திருக்குழலை வாய்வைத் தருளிற்று. இந்த போகம்தான் அவிச்சிந்நமாக வேணுமென்று அபிநிவேசம் பிறந்தவனுக்கு, அப்போது அவிச்சிந்ந போகஸ்தாநம் எங்கேயோ வென்று தேடவேண்டாதபடி. "ஶ்ரியா ஸாயஂ ஜமதூதி: । ஸூஜெ" என்கிறபடியே நித்ய விபூதியிலே இவனுடைய வரலாறு பார்த்திருக்கிறானிறே.

(2) ஜெவாநாம்—விஷ்ணு பக்தியுடைய தேவர்களுக்கும், ஊாநவாநாம் அ—விஷ்ணுபக்தி விஹீநரான அஸுர ப்ரக்ருதிகளுக்கும், ஸவஊா—ஆநுகூல்ய தசையோடு ப்ராதிகூல்ய தசையோடு வாசியற, ஸாஊாநூஊயிஜெவதம்—ஸர்வ ஸாதாரணமாகப் பற்றலாம்படி யிருக்கிற, தவ—தேவரீருடைய, அரணஅஂஅம்—சேர்த்தி அழகையுடைய திருவடிகளை, ரரணஂ—உபாயமாக, வூஜாஜி—அத்யவஸிக்கிறேன்.

ஜெவாநாம் ஊதூாஜி—கீழ் ச்லோகத்திலே உபேயத்தை நிர்ணயித்து, தத்விநியோகமாக உபாயத்தை அத்யவஸிக்கிறான். உபேயத்திலும் தலையான உபேயத்தை லபித்தாப்போல, உபாயத்திலும் தலையான உபாயத்தை லபிக்கப்பெற்றபடி; புத்ர பச்வந்நாதிகளையே ப்ராப்யமென் றிருப்பாரும், தேவர்களைப்பற்றி ஸ்வர்க்கத்தை லபிக்கையே புருஷார்த்த மென்றிருப்பாரும், ஈச்வரனையே பற்றி வைத்து

அன்றிக்கே, முன்னமே கண்விழித்துப் பாலமுது கைக்கொண்டு கண்ணுறங்கும் குழந்தையினிடம் காத்திருக்கும் தாய்போல, அடியேங்கள் உஜ்ஜீவநத்திற்கு வேண்டிய வஸ்துக்களை ஸ்ருஷ்டித்து எடுத்துக்கொண்டு இங்குவந்து இவன்நம்மை "அம்மே யென்று அபேக்ஷிப்ப தென்றாளோ?" என்று எனக்காகப் பாற்கடலில் காத்திருக்கு மவனே! யென்று ஈச்வரனுடைய கருணாம்ருதத்தை அநுபவித்து ஆநந்திக்கிறான் என்னவுமாம்.

(2) இப்படி, ருக்வேத மந்த்ரமான 'ஜிதஜெ' என்னும் ச்லோகத்தினால் சுருங்கச் சொல்லப்பட்ட சரண்ய சரணாகதி தத்பல ஸம்பத்நமான ஸர்வ விஷயங்களையும் விஸ்தாரமாக உபப்ருஹ்மணம் பண்ணுகிறது ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதாந்தர்க்கதங்களான மேல் ச்லோகங்கள். அவற்றுள், 'ஜெவாநாம் ஊாநவாநாஞ' என்கிற ச்லோகமானது ஸம்ஸாரி சேதநர்கள் ஸர்வேச்வரனை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கும் விஷயத்தில் ஜாதி குண வ்ருத்தாதிகளுடைய தாரதம்யத்தை அபேக்ஷிக்காமையாகிற சரண்யனுடைய ஸாம்யகுணத்தைச் சொல்லுகிற மூலமாய், சரணாகதியினுடைய ஸர்வாதிகாரத்வத்தை வெளியிடுகிறது. இவ்வர்த்தம் 'ஸவஊஸூ ரரணஂ ஸஹூஜ' என்று ச்ருதியிலும், 'ஸமொஹஂ ஸவஊ ஹூஜெஷு' என்று ஸ்ரீ கீதையிலும் 'ஸவஊொகரரணாய' என்று ஸ்ரீமத்ராமாயணத்திலும் மற்றும் வாமந ராக்ஷஸாதி வ்ருத்

[library stamp]

இந்த்ரபதம் முதலான பதங்களையே புருஷார்த்தமென்று அவன் பக்கலிலே லபிக்க இருப்பாருமா யிருக்கிற ஸம்ஸாரத்திலே,ஸர்வாதிகனாய்; ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், உபயவிபூதி நாயகனாயிருக்கிற ஸர்வேச்வரன் திருவடிகளிலே நித்ய கைங்கர்யத்தையே புருஷார்த்த மென்றிருக்கையாகிற இது ஒருத்தருக்கும் கிட்டுவதொன்று அன்றிறே. "மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு" என்றும், "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்றும், அவன் தனக்கும் துர்லபமாயிறே இருப்பது. அதுபோலே உபாயங்களிலும் வந்தால் கர்ம யோகாத்யுபாயங்களைப் பற்றுவாரும், "கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரபந்தநாத்" என்கிறபடியே திருநாமங்களைப் பற்றுவாரும், "தேசோऽயம் ஸர்வகாமதுக்" என்கிறபடியே தேசவிசேஷங்களைப் பற்றுவாரும், ஆக இப்படிச் சேதந பேதத்தோபாதி உபாயபேதமும், அஸங்க்யாதமாகச் சொல்லுகிற ஸம்ஸாரத்திலே ஸூசகமாய் நிரபாயமா யிருக்கிற ஸித்தோபாய பரிக்ரஹம் கிடைப்ப தொன்றன்றிறே. அப்படிப்பட்ட உபாய பரிக்ரஹத்தைச் சொல்லுகிறது. த்வயத்துக்கு வ்யாக்யாநம் பண்ணுகிறதாகில், அதில் க்ரமமொழிய முற்பட ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுவானென்னில்: இப்ராப்யம் தான் இந்தலையில் ருசியால் வந்ததன்றிக்கே, ருசியே தொடங்கி அத்தலையால் வந்ததாகையாலே முற்பட நிஷ்கர்ஷித்து அநந்தரம் உபாய ஸ்வீகாரத்தைப் பண்ணுகிறான்.

"தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்று இவ்வுபாய ஸ்வீகாரத்துக்கு அதிகாரி நியதியில்லை யென்கிறது; தேவர்களாகிறார், ஈச்வர னுக்கு அநுகூல கோடியிலுள்ளார்; தாநவராகிறார், ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதரா யிருக்குமவர்கள்; "த்வௌ பூதஸர்கௌ லோகேऽஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச" என்னக்கடவதிறே. "விஷ்ணுபக்தி பரோ தேவோ விபரீதஸ்ததாऽஸுர:" என்று இரண்டுக்குள்ளே அந்தர்ப்பூதையிறே ஸ்ருஷ்டி.

தாந்தங்களிலும் ஸுப்ரஸித்தமாயிறே இருப்பது. ஸர்வேச்வரன் ஜாதி குண வ்ருத் தங்களின் மேன்மையினால் ஸந்தோஷிப்பதில்லை என்கிற அர்த்தத்தை ஸ்ரீ ப்ரஹ்லா தாழ்வான், "மந்யே தநாபிஜநரூப தப:ச்ருதௌஜஸ் தேஜ: ப்ரபாவ பல பௌருஷ புத்தியோகா:। நாராதநாய ஹி பவந்தி பரஸ்ய பும்ஸோ பக்த்யா துதோஷ பகவாந் கஜயூதபாய" என்றும் ஸ்ரீ பாகவதத் தில் அருளிச்செய்தான். தநம், குலம், அழகு, தவம், சாஸ்த்ர ஜ்ஞாநம், வீர்யம், பிறரை அவமானப்படுத்தும் ஸாமர்த்யம், ப்ரபுத்தன்மை, பலம், பராக்ரமம், புத்தி இவை முதலான ஸத்குணங்களிலும் ஈச்வரன் ஸந்தோஷ மடைகிறதில்லை; கேவலம் பக்தியினால் மட்டும் ஸந்தோஷமடைகிறான்; இக்குணங்களில்லாத ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்குப் பக்தி யினால் மோக்ஷ மளித்தானன்றோ? இவ்வுலகில் அஜ்ஞர்களுக்குப் பெருமையாகத் தோன் றும் ஐச்வர்யாதிகளெல்லாம் பகவத் க்ருபைக்கு ஸாதநமாகமாட்டா வென்று பலிதம்.

தேவாநாம்—இங்கு, தேவ சப்தம் ஸ்துத்யர்த்தமான 'திவ்' தாதுவிலே நிஷ் பந்நமாய், 'தேவாஸ் ஸாவயதாமிஹ' என்கிறபடியே, பூமியில் பிறந்த மனிதரெல் லாம் தங்கள் திருவடி தொழு தெழும்படியான தேவஜாதியைச் சொல்லுகிறது.

3L
R65ma71 NHJ6
N28-183
186799

விற்பனைக்குத் தயார்

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யாநத்துடன் கூடியது

விலை அணை	0	10	0

மற்றும் கீழ்கண்ட புஸ்தகங்களும் விற்பனைக்குத் தயார்.

ஸ்ரீ ஸச் சரித்திர ரக்ஷை (தமிழ் மொழி பெயர்ப்புடன்)	0	14	0
ஸ்ரீ பரமபதஸோபானம் (தமிழ் வியாக்கியானத்துடன்)	0	8	0
ஸ்ரீ நம்மாழ்வார் வைபவம்	0	4	0

இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

காரியதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,
திருவல்லிக்கேணி, சென்னை.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.

தலைவலி
நரம்புவலி
முதுகுவலி
இடுப்புவலி
கீல்வாயுவு

இருமல்
ஜலதோஷம்
நெருப்புக்காயம்
காயங்கள்
சுளுக்குகள்

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

பம்பாய் அமிருதாஞ்சனம் டிபோ, மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதரிசியால் வெளியிடப்படுவது.